தினபூமி
thinaboomi.com
பூமி: 21 சுற்று: 362 மார்கழி 09
RNI Regn. No. 61494/94
வேலூர், புதன், டிசம்பர் 24, 2025
சென்னை · மதுரை · திருச்சி · கோவை · நெல்லை · சேலம் · வேலூர் · புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



டித்வா புயலால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு ரூ.4 ஆயிரம் கோடி நிதியுதவி வழங்குகிறது இந்தியா ....2-ம் பக்கம்

டெல்லியில் வங்காள தேச தூதரகம் முன் இந்து அமைப்பினர் திடீர் போராட்டம் - தள்ளுமுள்ளு ...3-ம் பக்கம்

முதல் முறையாக ஐ.சி.சி. தரவரிசையில் முதலிடம் பிடித்தார் தீப்தி சர்மா..! ....6-ம் பக்கம்





தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் நேற்று அண்ணா அறிவாலயத்தில் நன்னிலம், மயிலாடுதுறை, பூம்புகார் சட்டமன்ற தொகுதி தி.மு.க. நிர்வாகிகளை ஒன் டூ ஒன் முறையில் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

### இலங்கை கடற்படையால் கைதாகும் தமிழ்நாடு மீனவர்களின் பிரச்சினைக்கு

# நிரந்தர தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## மத்திய அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்

சென்னை, டிச. 24-

**இலங்கைக் காவலில் உள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவித்திட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் நீண்டகால பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான தீர்வு மற்றும் இரு தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளத்தக்க தீர்வை எட்டுவதற்கு, கூட்டுப் பணிக்குழு / மீனவர் அளவிலான பேச்சுவார்த்தையினை விரைவில் கூட்டுவதற்கு, மத்திய அரசு உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அமைச்சர் ஜெய்சங்கருக்கு எழுதிய கடிதத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தி உள்ளார்.**

**12 மீனவர்கள் கைது...**

ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 12 மீனவர்கள் நேற்று (23.12.2025) இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வை எட்டுவதற்கும், இலங்கைச் சிறையில் வாடும் தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் வலியுறுத்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

**வாழ்வாதாரம் பாதிப்பு...**

அக்கடிதத்தில், 22.12.2025 அன்று இராமேஸ்வரம் மீன்பிடித் தளத்திலிருந்து இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகில் மீன்பிடிக்கச் சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் (23-ம் தேதி) சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர். இலங்கைக் கடற்படையினரால் மீனவர்கள் இதுபோன்று தொடர்ந்து கைது செய்யப்பட்டு, அவர்களது படகுகளும் பறிமுதல் செய்யப்படுவதால், மீனவர்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. இது தமிழ்நாட்டின் கடலோர மீனவ சமூகங்களிடையே மிகுந்த துன்பத்தையும் துயரத்தையும் ஏற்படுத்துகிறது.

**நிரந்தரமான தீர்வு...**

எனவே, இந்த நீண்டகால பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான தீர்வு மற்றும் இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வை எட்டுவதற்கு, கூட்டுப் பணிக்குழு / மீனவர் அளவிலான பேச்சுவார்த்தையினை விரைவில் கூட்டுவதற்கு, மத்திய அரசு உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**நடவடிக்கைகளை...**

தற்போது, தமிழ்நாட்டைச் சேர்ந்த 248 மீன்பிடிப் படகுகளும், 62 மீனவர்களும் (2024-ம் ஆண்டில் கைது செய்யப்பட்ட 18 மீனவர்கள் உட்பட) இலங்கை அரசின் வசம் காவலில் உள்ளனர். இலங்கைக் கடற்படையினரால் மேலும் இதுபோன்ற கைது சம்பவங்கள் நடைபெறுவதைத் தடுக்கவும், இலங்கைக் காவலில் உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவித்திடவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நன்னிலம், மயிலாடுதுறை உள்ளிட்ட

# 3 தொகுதி தி.மு.க. நிர்வாகிகளுடன் முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை

சென்னை, டிச. 24-

**நன்னிலம், மயிலாடுதுறை, பூம்புகார் தொகுதி தி.மு.க. நிர்வாகிகளுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒன் டூ ஒன்' சந்தித்து ஆலோசனை நடத்தினார்.**

தமிழகத்தில் அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் தேர்தல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றன. பிரசாரம், பொதுக்கூட்டம், நலத்திட்டப்பணிகள், கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை என பல்வேறு நடவடிக்கைகளை அரசியல் கட்சிகள் மேற்கொண்டு வருகின்றன.

அந்த வகையில் தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் தொகுதி வாரியாக தி.மு.க. நிர்வாகிகளுடன் நேருக்கு நேர் ஒன் டூ ஒன் முறையில் ஆலோசனை நடத்தினார். இந்நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று 3 சட்டமன்ற தொகுதி தி.மு.க. நிர்வாகிகளை சந்தித்து ஆலோசனை நடத்தினார். அதன்படி, நன்னிலம், மயிலாடுதுறை, பூம்புகார் தொகுதி தி.மு.க. நிர்வாகிகளை ஒன் டூ ஒன் முறையில் சந்தித்த மு.க.ஸ்டாலின் சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

### வாக்காளர் பட்டியலில் பெயர்களை சேர்க்க, திருத்தம் செய்ய

# 75 ஆயிரம் வாக்கு சாவடிகளில் 4 நாட்கள் சிறப்பு முகாம்கள்

## டிச. 27, 28 - ஜன. 3, 4-ம் தேதிகளில் நடைபெறுகிறது

சென்னை, டிச. 24-

**தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, திருத்தம் செய்ய 75 ஆயிரம் வாக்கு சாவடிகளில் 4 நாட்கள் சிறப்பு முகாம்கள் வருகிற டிச. 27,28 மற்றும் ஜன.3, 4-ம் தேதிகளில் நடைபெறவுள்ளதாக தமிழக தலைமை தேர்தல் ஆணையர் அர்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.**

தமிழகத்தில் வரைவு வாக்காளர் பட்டியல் கடந்த 19-ந் தேதி வெளியிடப்பட்டது. அதில் 97 லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 66 லட்சம் பேர் இடம் மாறி சென்றவர்களாக காட்டப்பட்டு உள்ளனர். அவர்கள் வாக்காளராக சேர்வதற்கு ஒரு மாத காலம் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 18-ந் தேதி கடைசி நாள்.

தி.மு.க. சார்பில் 65 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தேர்தல் முகவர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர். அ.தி.மு.க. சார்பில் 64 ஆயிரம் முகவர்கள் பணியாற்றி வருகின்றனர். ஒரு முகவர், நாளொன்றுக்கு 50 வாக்காளர் சேர்ப்பு படிவங்களை மட்டுமே வழங்கலாம் என்ற கட்டுப்பாட்டை தேர்தல் கமிஷன் வகுத்துள்ளது.

தமிழகத்தில் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட பிறகு இதுவரை 92,626 படிவங்கள் பெயர் சேர்ப்புக்காகவும் (படிவம் 6), 1,007 படிவங்கள் பெயர் நீக்கத்திற்காகவும் (படிவம் 7) அளிக்கப்பட்டுள்ளன. இறந்த வாக்காளர் தவிர சுமார் 70 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டு, அவர்கள் மீண்டும் சேர இன்னும் ஒரு மாதத்திற்கும் குறைவான கால அளவு இருக்கும் நிலையில், இது வரை ஒரு லட்சத்திற்கும் குறைவான 6-ம் எண் படிவங்கள்தான் வந்துள்ளன.

இந்த நிலையில், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, திருத்தம் செய்ய 4 நாட்கள் சிறப்பு முகாம் நடைபெறும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் அறிவித்துள்ளார். இந்த சிறப்பு முகாம் வருகிற 27,28-ம் தேதி (சனி, ஞாயிறு) மற்றும் ஜனவரி 3,4 (சனி, ஞாயிறு)ஆகிய தேதிகளில் தமிழகம் முழுவதும் 75 ஆயிரம் வாக்குச்சாவடிகளில் நடைபெறுகிறது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க இது வரை 6.11 லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் ப.சிதம்பரம் சந்தித்து பேச்சு

## அரசியல் நிலவரம் குறித்து ஆலோசனை

சென்னை, டிச. 24-

**சென்னை ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள முகாம் அலுவலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை காங்கிரஸ் மூத்த தலைவரும், முன்னாள் மத்திய நிதி மந்திரியுமான ப.சிதம்பரம் சந்தித்து பேசினார்.**

தமிழக சட்டசபைத் தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் கூட்டணி நகர்வுகள், விருப்ப மனுக்கள் அளித்தல், பிரசாரங்கள், பொதுக்கூட்டங்கள், தேர்தல் அறிக்கை தயாரிப்பு என அரசியல் கட்சிகள் தீவிரமாக களமிறங்கிவிட்டன. இதனால் தேர்தல் களம் இப்போதே சூடுபிடிக்க தொடங்கி விட்டது.

ஆளும் தி.மு.க. கூட்டணியை பொறுத்தவரை காங்கிரஸ், விடுதலைச்சிறுத்தைகள், ம.தி.மு.க., 2 கம்யூனிஸ்டுகள், மக்கள் நீதி மய்யம் உள்ளிட்ட கட்சிகள் இடம் பெற்றுள்ளன. இதில் காங்கிரஸ் புதிய வரவான த.வெ.க.வுடன் கூட்டணி வைக்கப்போவதாக சமீபத்தில் தகவல் பரவியது. ஆனால் இதனை அக்கட்சியினர் மறுத்தனர். இதற்கிடையே காங்கிரஸ் சார்பில் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்த தமிழ்நாடு காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் தலைமையில் 5 பேர் குழு கட்சி மேலிடத்தால் அமைக்கப்பட்டது.

இந்த குழு கடந்த 3-ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து பேசியது. இது காங்கிரஸ் - த.வெ.க. கூட்டணிக்கு முற்றுப்புள்ளி வைப்பதுபோல் இருந்தது. இதற்கிடையில், தேர்தலின் போது மக்களுக்கு அளிக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்ற ஆட்சி அதிகாரத்தில் பங்கு அவசியம் என்று காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் தெரிவித்தார்.

இது தமிழக அரசியல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலினை காங்கிரஸ் மூத்த தலைவரும், முன்னாள் மத்திய நிதி மந்திரியுமான ப.சிதம்பரம் சந்தித்து பேசியுள்ளார்.

சென்னை ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பில் தமிழகத்தில் எஸ்.ஐ.ஆர். பணி, அரசியல் நிலவரம், கூட்டணி குறித்து இருவரும் பேசியதாகக் கூறப்படுகிறது. மேலும் ஆட்சியில் பங்கு குறித்து கிரிஷ் சோடங்கர் பேசியது குறித்தும் விவாதித்தாக கூறப்படுகிறது. சுமார் 10 நிமிடங்கள் வரை நடைபெற்றதாகக் தகவல் வெளியாகியுள்ளது.

### சட்டசபைத் தேர்தல் தொகுதி பங்கீடு குறித்து

# இ.பி.எஸ். - பியூஷ் கோயல் ஆலோசனை

சென்னை, டிச. 24-

**தமிழக சட்டசபைத் தேர்தல் தொகுதி பங்கீடு குறித்து அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி - தமிழக பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயல் விவாதித்ததாக தகவல் வெளியாகியுள்ளது**



தமிழக சட்டசபைத் தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் கூட்டணி நகர்வுகள், விருப்ப மனுக்கள் அளித்தல், பிரசாரங்கள், பொதுக்கூட்டங்கள், தேர்தல் அறிக்கை தயாரிப்பு என அரசியல் கட்சிகள் தீவிரமாக களமிறங்கிவிட்டன. இதனால் தேர்தல் களம் இப்போதே சூடுபிடிக்க தொடங்கி விட்டது.

இந்த நிலையில், தமிழக பா.ஜனதா தேர்தல் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் நேற்று சென்னை வந்தார். அவர் தியாகராயகரில் உள்ள பா.ஜனதா அலுவலகத்தில் பா.ஜ.க. நிர்வாகிகளுடன் சட்டமன்ற தேர்தல் பணி, கள நிலவரம், வெற்றி வாய்ப்பு உள்ளிட்டவை குறித்து ஆலோசனை நடத்தினார். அதனை தொடர்ந்து அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தமிழக பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயலை சென்னை லீலா பேலசில் தொகுதி பங்கீடு தொடர்பாக சுமார் ஒன்றரை மணிநேரமாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

பா.ஜ.க. சார்பில் நயினார் நாகேந்திரன், எல்.முருகன், அரவிந்த் மேனன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். அ.தி.மு.க. தரப்பில் திண்டுக்கல் சீனிவாசன், கே.பி.முனுசாமி வேலுமணி, தங்கமணி உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த ஆலோசனை கூட்டத்தில் பா.ஜ.க. போட்டியிட விரும்பும் தொகுதிகளின் பட்டியல் அ.தி.மு.க. நிர்வாகிகள் வசம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிகிறது. கூட்டணி பலப்படுத்துவது, புதிய கட்சிகளை கூட்டணியில் இணைப்பது உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து பியூஷ் கோயல், எடப்பாடி பழனிசாமி உடன் பேசியதாக வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

இந்த பேச்சுவார்த்தையில் 30 - 40 தொகுதிகள் வரை பா.ஜ.க.விற்கு ஒதுக்க வேண்டும் என வலியுறுத்தியதாக கூறப்படுகிறது. மேலும் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி உடனான ஆலோசனையில் விஜய் குறித்து பியூஸ் கோயல் விவாதித்ததாக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தவெக வாக்குகளால் தே.ஜ.கூட்டணிக்கு பாதிப்பு இல்லாத வகையில் பணியாற்ற வேண்டும் என்று கோயல் அறிவுறுத்தியாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆலோசனை கூட்டம் முடிந்த பின் வெளியே வந்த பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் செய்தியாளர் சந்திப்பின் போது முதற்கட்ட பேச்சுவார்த்தை சுமூகமாக இருந்ததாக தெரிவித்தார்.

மேலும் பா.ஜ.க. சார்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் பற்றி பதில் தர மறுத்து விட்டு அங்கிருந்து புறப்பட்டு சென்றார்.

### 6500 கி. எடையுள்ள `புளூபேர்ட்-6' செயற்கைக்கோளுடன்

# இன்று விண்ணில் பாய்கிறது எல்.வி.எம்.3- எம்.6 ராக்கெட்

பெங்களூரு, டிச. 24-

**6500 கி. எடையுள்ள அமெரிக்காவின் `புளூபேர்ட்-6' செயற்கைக்கோளுடன் இன்று விண்ணில் பாய்கிறது எல்.வி.எம்.3- எம்.6 ராக்கெட். இதற்கான 24 மணி நேர கவுண்ட்டவுன் நேற்று காலை 8 மணிக்கு தொடங்கியது.**

அமெரிக்காவைச் சேர்ந்த ஏஎஸ்டி நிறுவனம், தகவல் தொடர்பு சேவைக்காக 6500 கிலோ எடையில் 'புளூபேர்ட்-6' என்ற செயற்கைக்கோளை உருவாக்கி உள்ளது. இது தொலைதூர கிராமங்களுக்கு மொபைல் போன் அதிவேக இணையதள சேவைகளை வழங்க உதவும். இந்த செயற்கைக்கோளை இஸ்ரோ விண்ணில் செலுத்த உள்ளது.

ஆந்திர மாநிலம் திருப்பதி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீஹரிகோட்டா, சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள 2-வது ஏவுதளத்தில் இருந்து இன்று (புதன்கிழமை) காலை 8.54 மணிக்கு பாகுபலி ராக்கெட்டான எல்.வி.எம்.3- எம்.6யை இஸ்ரோ விண்ணில் ஏவுகிறது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன. ராக்கெட்டிற்கு தேவையான எரிபொருள் நிரப்பும் பணி நிறைவடைந்து, ஏவுதளத்தில் ராக்கெட் தயார் நிலையில் உள்ளது. ராக்கெட் மற்றும் செயற்கைக்கோளின் செயல்பாடுகளை விஞ்ஞானிகள் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். இந்த நிலையில் ராக்கெட்டிற்கான இறுதிக்கட்ட பணியான 24 மணி நேர கவுண்ட் டவுன் நேற்று காலை 8.54 மணிக்கு தொடங்கியது.

**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
| --- | --- |
| -42.64 | 4.75 |
| பாயிண்ட் 85,524.84 | பாயிண்ட் 26,177.15 |




**தங்கம்**
1 சவரன் ₹1,02,160
1 கிராம் ₹12,770



**வெள்ளி**
1 கிலோ ₹234,000
1 கிராம் ₹234.00



**டாலர்** ₹89.59



**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34

### டித்வா புயலால் கடுமையாக பாதிக்கப்பட்ட

# இலங்கைக்கு ரூ.4 ஆயிரம் கோடி நிதியுதவி வழங்குகிறது இந்தியா

**கொழும்பு, டிச. 24-**

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு இந்தியா ரூ. 4 ஆயிரம் கோடி நிதியுதவி வழங்க முடிவு செய்துள்ளது. இதில் 3 ஆயிரம் கோடி ரூபாய் கடன் அடிப்படையில் வழங்கப்படும் என தகவல் வெளியாகியுள்ளது. இந்த நிதியுதவி புயலால் பாதிக்கப்பட்ட இலங்கையை மறுசீரமைப்பு செய்ய பயன்படுத்தப்பட உள்ளது.



இலங்கையை இம்மாத தொடக்கத்தில் டித்வா புயல் தாக்கியது. இந்த புயலால் இலங்கையில் 643 பேர் உயிரிழந்தனர். மேலும், ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர். இதனிடையே, டித்வா புயலால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு உதவிடும் வகையில் இந்திய அரசு ஆபரேஷன் சாகர் பந்த் என்ற திட்டத்தின்கீழ் நிவாரண உதவிகளை செய்து வருகிறது. மேலும், பிரதமர் மோடியின் சிறப்பு தூதராக மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெயசங்கர் இலங்கை சென்றுள்ளார். அவர் இலங்கையில் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்தார். மேலும், ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவை சந்தித்தார்.

இந்நிலையில், டித்வா புயலால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு ரூ. 4 ஆயிரம் கோடி நிதியுதவி வழங்க இந்தியா திட்டமிட்டுள்ளது. இதில் 3 ஆயிரம் கோடி ரூபாய் கடன் அடிப்படையில் வழங்கப்படும் என தகவல் வெளியாகியுள்ளது. இந்த நிதியுதவி புயலால் பாதிக்கப்பட்ட இலங்கையை மறுசீரமைப்பு செய்ய பயன்படுத்தப்பட உள்ளது.

# அமெரிக்கா: சிறிய ரக விமானம் கடலில் விழுந்ததில் 5 பேர் பலி

**வாஷிங்டன், டிச. 24-**

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணம் கெல்வெஸ்டான் நகர் அருகே கடற்பகுதியில் விமானம் சென்றுகொண்டிருந்த நிலையில் கட்டுப்பாட்டை இழந்து கடலில் விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் விமானத்தில் பயணித்த குழந்தை உள்பட 5 பேர் உயிரிழந்தனர்.

மெக்சிகோவில் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு மேல்சிகிச்சைக்காக அமெரிக்காவின் டெக்சாசில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதையடுத்து, மெக்சிகோ கடற்படைக்கு சொந்தமான சிறிய ரக விமானத்தில் உடல்நலம் பாதிக்கப்பட்ட சிறுமி, உறவினர்கள், பாதுகாப்புப்படை அதிகாரிகள் என மொத்தம் 8 பேர் நேற்று அமெரிக்காவுக்கு பயணித்தனர்.

இந்நிலையில், அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணம் கெல்வெஸ்டான் நகர் அருகே கடற்பகுதியில் விமானம் சென்றுகொண்டிருந்தது. அப்போது திடீரென விமானியின் கட்டுப்பாட்டை இழந்த விமானம் கடலில் விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் விமானத்தில் பயணித்த குழந்தை உள்பட 5 பேர் உயிரிழந்தனர். எஞ்சிய 3 பேரின் நிலை என்ன என்று தெரியவில்லை என்றும் அவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் மீட்புக்குழுவினர் தெரிவித்தனர். விமான விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### நெதர்லாந்தில் அதிர்ச்சி சம்பவம்:

# கூட்டத்தின் மீது கார் மோதி 9 பேர் காயம்

**ஆம்ஸ்டர்டாம், டிச. 24-**

நெதர்லாந்து: கிறிஸ்துமஸ் கொண்டாட்ட அணுவகுப்பு காண கூடியிருந்தவர்கள் மீது மோதிய கார் ; 9 பேர் காயம்

கிறிஸ்த மதத்தினரின் முக்கிய பண்டிகையான கிறிஸ்துமஸ் நாளை கொண்டாடப்பட உள்ளது. கிறிஸ்துமசை கொண்டாட உலகம் முழுவதும் கிறிஸ்தவ மதத்தினர் தயாராகி வருகின்றனர். குறிப்பாக, மேற்கத்திய நாடுகளில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் களைகட்டியுள்ளது.

நெதர்லாந்து நாட்டின் ஹெல்டர்லாந்து மாகாணம் நன்ஸ்பெட் பகுதியில் உள்ள சாலையில் நேற்று இரவு கிறிஸ்துமஸ் கொண்டாட்ட அணிவகுப்பு நடைபெறவிருந்தது. இந்த அணிவகுப்பை காண ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். அப்போது, சாலையில் வேகமாக வந்த கார் அங்கு கூடியிருந்த மக்கள் மீது மோதியது. இந்த சம்பவத்தில் 9 பேர் காயமடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார், காயமடைந்த 9 பேரையும் மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். அதேவேளை, காரை ஓட்டிய நன்ஸ்பெட் பகுதியை சேர்ந்த 56 வயது மூதாட்டியிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் விபத்தா?, பயங்கரவாத தாக்குதலா? என்பது குறித்து போலீசார் இதுவரை எந்த தகவலும் தெரிவிக்கவில்லை.

### வங்காளதேசத்தில்

# மேலும் ஒரு மாணவர் தலைவர் மீது துப்பாக்கிச்சூடு - பதற்றம்

**டாக்கா, டிச. 24-**

வங்காளதேசத்தில் மேலும் ஒரு மாணவர் தலைவர் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்ட சம்பவம் அங்கும் மேலும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

வங்காளதேசத்தில் கடந்த ஆண்டு நடந்த மாணவர் புரட்சியில் முக்கிய தலைவர்களில் ஒருவராக இருந்த ஷெரீப் உஸ்மான் ஹாதி (வயது32) படுகொலையால் ஏற்பட்ட பதற்றம் மறைவதற்குள், வங்காளதேசத்தில் மேலும் ஒரு மாணவர் தலைவர் நேற்று சுடப்பட்டு உள்ளார். தேசிய குடிமக்கள் கட்சி என்ற கட்சியின் குல்னா பிரிவு தலைவரான மொதாலேப் ஷிக்தர் தென்மேற்கு குல்னா நகரில் மர்ம நபர்களால் துப்பாக்கிச்சூட்டுக்கு ஆளானார்.

தலையில் பலத்த காயமடைந்த அவர் குல்னா மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். தலையில் இருந்து பெருமளவில் ரத்தம் வெளியேறியதால் அவர் அபாய கட்டத்திலேயே இருப்பதாக டாக்டர்கள் கூறியுள்ளனர். அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. ஷிக்தரை சுட்டவர்கள் குறித்து போலீசார் தீவிர விசாரணையில் இறங்கி உள்ளனர். ஆனால் அவர்கள் குறித்தும், கொலைக்கான காரணம் குறித்தும் எந்த துப்பும் கிடைக்கவில்லை.

இது நாடு முழுவதும் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

### இந்தியா - பாகிஸ்தான் இடையே

# அணு ஆயுதப்போர் ஏற்படுவதை நிறுத்தினேன்: டொனால்ட் ட்ரம்ப்

**வாஷிங்டன், டிச. 24-**

அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப் நேற்று வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது, இந்தியா - பாகிஸ்தான் அணு ஆயுதப்போர் ஏற்படுவதை தடுத்து நிறுத்தியதாக அவர் கூறினார்.

இது தொடர்பாக டொனால்டு ட்ரம்ப் கூறியதாவது, நான் 8 போர்களை நிறுத்தியுள்ளேன். கம்போடியா, தாய்லாந்து இடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. அந்த பேச்சுவார்த்தையில் நல்ல முடிவு எட்டப்படும் என நம்புகிறேன். இந்தியா, பாகிஸ்தான் இடையே அணு ஆயுதப் போர் ஏற்படுவதை தடுத்து நிறுத்தினேன். நீங்கள் 1 கோடி பேரை காப்பாற்றியதாக பாகிஸ்தான் பிரதமர் என்னிடம் கூறினார். இந்தியா - பாகிஸ்தான் போரில் 8 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. உக்ரைன் - ரஷியா போரை மட்டுமே இதுவரை என்னால் நிறுத்த முடியவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

**வாக்களிப்பது நமது கடமை**

### அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புக்காக

# கிரீன்லாந்து நிச்சயம் வேண்டும்: அதிபர் ட்ரம்ப் பேச்சால் சர்ச்சை

**நியூயார்க், டிச. 24-**

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புக்காக கிரீன்லாந்து பகுதி நிச்சயமாக வேண்டும் என கூறி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் சர்ச்சையை கிளப்பியுள்ளார்.

அமெரிக்க அதிபராக டிரம்ப் பொறுப்பேற்றது முதல் அண்டை நாடுகளை வரியினாலும், கருத்தாலும் தொடர்ந்து அச்சுறுத்தி வருகிறார். அந்த வகையில், நாட்டின் பாதுகாப்பு மற்றும் உலக சுதந்திரத்திற்காக கிரீன்லாந்து மீதான உரிமையும், கட்டுப்பாடும் அவசியம் எனக்கூறிய அதிபர் டிரம்ப், டென்மார்க்கிடம் இருந்து கிரீன்லாந்தை வாங்கவேண்டும் எனக்கூறி பரபரப்பை ஏற்படுத்தினார்.

ஏராளமான கனிம வளங்கள் அங்கு குவிந்து கிடக்கின்றன என்பதால் சீனாவுக்குப் போட்டியாக இப்பகுதியைக் கைப்பற்ற உள்ளதாக டிரம்ப் தெரிவித்து வருகிறார். இந்நிலையில் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புக்காக கிரீன்லாந்து பகுதி நிச்சயமாக வேண்டும் என கூறி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் சர்ச்சையை கிளப்பியுள்ளார். டென்மார்க் நாட்டின் கிரீன்லாந்து பகுதிக்கு மட்டும் தனியாக தூதரை நியமித்துள்ள ட்ரம்ப், அந்த பகுதி அமெரிக்காவுக்கு நிச்சயம் கிடைத்தாக வேண்டும் எனவும் பேசியுள்ளார்.

### பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு

# 10 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பயண வவுச்சர்களை டிச.26 முதல் வழங்கும் இண்டிகோ

**மும்பை, டிச. 25-**


விமான சேவை ரத்து, தாமதத்தால் பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு அறிவிக்கப்பட்ட ரூ.10,000 மதிப்புள்ள பயண வவுச்சர்களை டிசம்பர் 26ம் தேதி முதல் வழங்க உள்ளதாக இண்டிகோ ஏர்லைன்ஸ் அறிவித்துள்ளது.

நாடு முழுவதும் இந்த மாதம் இண்டிகோ நிறுவனத்தின் விமான சேவையின் பாதிப்பால் பயணிகள் கடும் அவதிக்குள்ளாகினர். விமானங்கள் ரத்து செய்யப்பட்டதால் டிக்கெட் எடுத்துக் காத்திருந்த பயணிகளுக்கு பெருத்த ஏமாற்றத்தை தந்தது. கடந்த டிசம்பர் 1-7ம் தேதி வரை இண்டிகோ விமானங்கள் ரத்தான நிலையில் பணத்தை திருப்பி கொடுக்க மத்திய அரசு கெடு விதித்தது. இதனையடுத்து , டிக்கெட் கட்டணத்தை இண்டிகோ நிறுவனம் ரீபண்ட் செய்தது.

இந்நிலையில், இந்தியா முழுவதும் டிசம்பர் 3, 4, 5 தேதிகளில் விமான சேவை ரத்து, தாமதத்தால் பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு அறிவிக்கப்பட்ட ரூ.10,000 மதிப்புள்ள பயண வவுச்சர்களை டிசம்பர் 26ம் தேதி முதல் வழங்க உள்ளதாக இண்டிகோ ஏர்லைன்ஸ் அறிவித்துள்ளது.

இந்த வவுச்சர்கள் அடுத்த 12 மாதங்களுக்கு செல்லுபடியாகும். இது அரசு விதிகளின்படி வழங்கப்பட வேண்டிய ரூ. 5000-10,000 இழப்பீடு தொகையுடன் சேர்த்து கூடுதலாக இண்டிகோ நிறுவனம் சார்பில் வழங்கப்படும் தொகையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

**24-12-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** புதிய உத்தியோகமும், உத்வேகமும் ஏற்படும். பணியில் பணிவும், துணிவும் இருந்தால் முன்னேற்றம் ஏற்படும். பெண்களால் இலாபமும், போகமும் உண்டு.

**ரிஷபம்:-** புகழ் ஓங்கும். தெய்வ நம்பிக்கையும், பாக்கிய விருத்தியும் ஏற்படும். கோவில் திருப்பணிகள் செய்ய மனம் விழையும். வாழ்க்கையில் வசந்த காலமென நல்ல திருப்பங்கள் ஏற்படும்.

**மிதுனம்:-** அதிகாரிகளிடம் பணிவோடு நடந்தால் அனுகூலம் பெறலாம். மனைவியின் கலகத்தால் உறவுகளிடையே உரசல்கள் ஏற்படலாம். பொருள்களை கவனமாகப் பாதுகாத்தால் இழப்பைத் தவிர்க்கலாம்.

**கடகம்:-** சாதுர்யப் பேச்சால் அனைவரையும் கவர்வீர்கள். பலவழிகளில் பணவரவு உண்டாகிப் பெரிய மனிதர் எனப் பெயரெடுப்பீர்கள். அரசாங்கத்தால் ஆதாயங்கள் ஏற்படும்.

**சிம்மம்:-** திருப்திகரமான பணவரவுகள் மனமகிழ்ச்சி தரும். எதிர்பாராத வரவுகளும் ஏற்றம் தரும். புதிய ஆண், பெண் நண்பர்கள் அமைவர். அழகிய வீடு அமையும் வாய்ப்பு உருவாகும்.

**கன்னி:-** எவ்வளவு கடினமாக உழைத்தாலும் உங்கள் திறமைக் கேற்ற பாராட்டுக் கிடைக்காது. அக்கம் பக்கத்தாருடன் அனுசரணையாக நடப்பது நல்லது. வாகனங்களில் நிதானமாகச் சென்றால் விபத்துக்களைத் தவிர்க்கலாம்.

**துலாம்:-** வீட்டில் திருட்டைத் தவிர்க்க எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம். தாயின் உடல்நிலையில் மிகுந்த கவனம் தேவை. சிலருக்குப் பணமுடை மற்றும் பணயிழப்புகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:-** பழைய நிலுவைகள் கைக்கு கிடைப்பதால், புதிய உற்சாகம் பிறக்கும். குழந்தைகள் மீது அன்பும், அவர்களின் முன்னேற்றத்தில் ஆர்வமும் ஏற்படும். மனைவியின் பணிவிடைகள் மகிழ்ச்சி அளிக்கும்.

**தனுசு:-** சீரான வாழ்க்கைப் பயணத்தில் சில தடைகளும், சிக்கல்களும் ஏற்படலாம். மனைவியுடன் வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். வருமானக் குறைவு கடன் தொல்லைகளைத் தரும்.

**மகரம்:-** குடும்ப வாழ்க்கையில் அமைதியும், மகிழ்ச்சியும் நிலவும். படுக்கை சுகங்கள், நல்ஆடைகள், நண்பர்கள் அருகாமை, நல்அதிர்ஷ்டம் என எல்லா நலன்களும் தரும்.

**கும்பம்:-** பெண்களால் கட்டுக்கடங்காத செலவுகள் ஏற்படும். வாகன விபத்தைத் தவிர்க்க வண்டியில் மெதுவாகச் செல்லவும். உறவுகளுடனான கருத்து வேறுபாடுகளைத் தவிர்க்க முயலவும்.

**மீனம்:-** பிறருக்கு உதவி புரிவதில் பேரின்பம் அடைவீர்கள். பிரிந்த தம்பதிகள் மீண்டும் ஒன்று சேர்ந்து மகிழ்வர். பணவரவு மற்றும் பெண்களால் இலாபம் ஏற்பட மனதில் புதிய உற்சாகம் பிறக்கும்.

### சட்டசபை தேர்தலில் போட்டியிட

# அ.தி.மு.க. சார்பில் வழங்கப்பட்ட விருப்ப மனு விநியோகம் நிறைவு

**சென்னை, டிச. 24-**

சட்டசபை தேர்தலை முன்னிட்டு அ.தி.மு.க. சார்பில் போட்டியிட விருப்ப மனு வழங்கப்பட்ட நிலையில் நேற்றுடன் அது நிறைவடைந்தது.

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள தமிழக சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட விரும்பும் அ.தி.மு.க.வினர் விருப்ப மனு தாக்கல் செய்யலாம் என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி சமீபத்தில் அறிவித்திருந்தார். அதன்படி இந்த விருப்ப மனு கடந்த டிசம்பர் 15-ம் தேதி தொடங்கி நடந்து வருகிறது. சென்னை ராயப்பேட்டை அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி விருப்ப மனுக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கட்சியின் தலைமை அலுவலகத்துக்கு வந்து விருப்ப மனுக்களை அ.தி.மு.க.வினர் தாக்கல் செய்து வருகின்றனர்.

மனு தாக்கல் செய்ய வரும்போது, பலரும் எம்ஜிஆர் மற்றும் ஜெயலலிதா போல வேடமிட்டு வருகின்றனர். இதனால் இவர்களை பார்க்க அ.தி.மு.க. அலுவலகம் அமைந்துள்ள பகுதியில் கூட்டம் அலைமோதி வருகிறது. அ.தி.மு.க. விருப்ப மனு ரூ.15,000-க்கும், புதுச்சேரி சட்டமன்ற தொகுதிகளுக்கான விருப்ப மனு ரூ.5000-க்கும் வழங்கப்பட்டு வருகிறது. அ.தி.மு.க.வினர் அளித்து வரும் விருப்ப மனுக்களை அமைப்பு செயலாளர்கள் முன்னின்று பெற்று வந்தனர். இந்நிலையில் கடந்த 15ம் தேதி தொடங்கிய விருப்ப மனு விநியோகம் நேற்றுடன் நிறைவடைந்தது.

எனவே போட்டியிட விரும்புவோர் விருப்ப மனுக்களை பெற்று, அதில் கேட்கப்பட்டுள்ள விவரங்களை பூர்த்தி செய்து, ரூ.15,000க்கு வரைவோலை எடுத்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும். விருப்ப மனுக்களை வழங்க நேற்று கடைசி நாள் என்பதால், ஏராளானோர் நேற்று மனு தாக்கல் செய்தனர்.

# வங்காள தேசத்தில் இந்தியர்களுக்கு பாதுகாப்பு இல்லை: ஷிராஸ் அலி

**டாக்கா, டிச. 24-**

வங்கதேசத்தில் இந்தியர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று தெரிவித்துள்ள இசைக்கலைஞர் ஷிராஸ் அலி கான், இந்தியன் என்ற அடையாளத்தை மறைத்ததால் அங்கிருந்து உயிர்பிழைத்து வெளியேறினேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

வங்காளதேசத்தில் கடந்த ஆண்டு பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு எதிராக வெடித்த மாணவர் புரட்சியால் அவரது ஆட்சி கவிழ்ந்தது. அத்துடன் நாட்டை விட்டு வெளியேறிய அவர், இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ளார். இதனால் இடைக்கால அரசின் கீழ் இருக்கும் வங்காளதேசத்தில் அடுத்த ஆண்டு பிப்ரவரி 12-ந்தேதி நாடாளுமன்ற தேர்தல் நடக்கிறது. கடந்த ஆண்டு நடந்த மாணவர் புரட்சியில் முக்கிய தலைவர்களில் ஒருவராக இருந்த ஷெரீப் உஸ்மான் ஹாதி (வயது 32) என்பவர் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட திட்டமிட்டு கடந்த 12-ந்தேதி டாக்கா அருகே பிரசாரத்தை தொடங்கினார்.

அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்கள் உஸ்மான் ஹாதியை துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பினர். இதில் தலையில் பலத்த காயமடைந்த ஹாதி, சிங்கப்பூரில் சிகிச்சை அளித்தும் பலனின்றி கடந்த வாரம் உயிரிழந்தார். இதைத்தொடர்ந்து நாட்டில் மீண்டும் போராட்டமும் வன்முறையும் நிகழ்ந்தன.

இந்த சூழலில், வங்காள தேசத்தில் மேலும் ஒரு மாணவர் தலைவர் சுடப்பட்டதால் அதிர்ச்சியும், பரபரப்பும் ஏற்பட்டு உள்ளது. இந்த நிலையில் வங்கதேசத்தில் இந்தியர்களுக்கு பாதுகாப்பு இல்லை; இந்தியன் என்ற அடையாளத்தை மறைத்ததால் அங்கிருந்து உயிர்பிழைத்து வெளியேறினேன்,'' என, சரோட் இசைக்கலைஞர் ஷிராஸ் அலி கான் தெரிவித்து உள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், " வங்கதேசத்தில் உள்ள இந்தியர்கள், எப்படியாவது தாயகம் திரும்பிவிட வேண்டும் என முயற்சித்து வருகின்றனர். என் மூதாதையர்கள் அங்கிருப்பதால், என் தாயாரும், இசைக்குழுவினர் சிலரும் வங்கதேசத்தில் உள்ளனர். அவர்கள் விரைவில் இந்தியா திரும்புவர். இந்தியர்கள் யாரும் அங்கு செல்ல வேண்டாம். நிலைமை சீராகும் வரை நானும் வங்கதேசம் செல்லமாட்டேன்'' என்று தெரிவித்துள்ளார்.

# எப்ஸ்டீன் ஆவணங்களில் நீக்கப்பட்ட அதிபர் ட்ரம்ப் படங்கள் மீண்டும் சேர்ப்பு

**வாஷிங்டன், டிச. 24-**

எப்ஸ்டீன் ஆவணங்களில் இருந்து நீக்கப்பட்ட அதிபர் ட்ரம்ப்பின் புகைப்படங்களை அந்நாட்டு நீதித்துறை மீண்டும் சேர்த்துள்ளது. பதிப்பாய்வுக்காக புகைப்படங்கள் தற்காலிகமாக நீக்கப்பட்டதாகவும், தற்போது மாற்றம் ஏதுமின்றி புகைப்படங்கள் மீண்டும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் அமெரிக்க நீதித்துறை தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவை சேர்ந்த பிரபல நிதியாளர் ஜெப்ரி எப்ஸ்டீன் பல்வேறு பாலியல் குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அவர் மீதான வழக்குகள் நிலுவையில் இருந்தபோது சிறையிலேயே தற்கொலை செய்து கொண்டார். இதற்கிடையே அவர் மீதான விசாரணை ஆவணங்களில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் உள்பட பிரபலங்கள் பெயர்கள் இருப்பதாக தகவல் வெளியானது.

இதையடுத்து எப்ஸ்டீன் வழக்கு தொடர்பான அனைத்து ஆவணங்களையும்பொதுவெளியில் வெளியிட வேண்டும் என கோரிக்கை எழுந்தது. இதன்படி, ஜெப்ரி எப்ஸ்டீனுடன் தொடர்புடைய 68 புகைப்படங்களின் தொகுப்பு ஆவணங்கள் அமெரிக்க ஜனநாயக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களால் கடந்த 19-ந்தேதி வெளியிடப்பட்டது.

அதில் பல முக்கிய நபர்கள் இடம்பெற்றுள்ளனர். அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளிண்டன், பாப் பாடகர் மைக்கேல் ஜாக்சன், ஹாலிவுட் நடிகர் கிறிஸ் டக்கர், இங்கிலாந்து முன்னாள் இளவரசர் ஆண்ட்ரூ உள்ளிட்ட பல்வேறு பிரபலங்களின் புகைப்படங்கள் அதில் அடங்கும். இவர்களில் பலர் ஏற்கனவே மறைந்துவிட்ட நிலையில், மற்ற பிரபலங்கள் தங்களுக்கும் எப்ஸ்டீன் வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என மறுத்துள்ளனர்.

இதனிடையே, ஜெப்ரி எப்ஸ்டீன் தொடர்பான ரகசிய ஆவணங்கள் வெளியிடப்பட்ட 24 மணி நேரத்திற்குள், அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் எப்ஸ்டீன் ஒன்றாக இருக்கும் புகைப்படங்கள் உள்ளிட்ட 16 கோப்புகள் அமெரிக்க நீதித்துறை இணையதளத்தில் இருந்து எவ்வித விளக்கமுமின்றி நீக்கப்பட்டன.

இணையதளத்தில் இருந்து நீக்கப்பட்ட கோப்புகளில் நிர்வாண ஓவியங்கள் மற்றும் ட்ரம்ப், மெலனியா, எப்ஸ்டீன் ஆகியோர் இருக்கும் புகைப்படங்களும் அடங்கும். இது உண்மைகளை மறைக்கும் செயல் என நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுவின் ஜனநாயகக் கட்சியினர் கடுமையாக குற்றம்சாட்டினர்.

இந்த நிலையில், எப்ஸ்டீன் ஆவணங்களில் இருந்து நீக்கப்பட்ட அதிபர் ட்ரம்ப்பின் புகைப்படங்களை அந்நாட்டு நீதித்துறை மீண்டும் சேர்த்துள்ளது. பதிப்பாய்வுக்காக புகைப்படங்கள் தற்காலிகமாக நீக்கப்பட்டதாகவும், தற்போது மாற்றம் ஏதுமின்றி புகைப்படங்கள் மீண்டும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் அமெரிக்க நீதித்துறை தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் துப்பாக்கிச்சூடு: 5 காவல்துறை அதிகாரிகள் பலி

**லாகூர், டிச. 24-**

பாகிஸ்தானில், காவல் துறையினரின் வாகனத்தின் மீது மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 5 காவலர்கள் கொல்லப்பட்டனர்.

கைபர் பக்துன்குவா மாகாணத்தின், கராக் மாவட்டத்தில் அமைந்துள்ள தனியார் எரிசக்தி நிறுவனத்திற்கான பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த காவல் துறையினரின் வாகனத்தின் மீது அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலில், 5 காவலர்கள் கொல்லப்பட்டதுடன், அவர்களின் வாகனத்தின் மீது அந்த மர்ம நபர்கள் தீயிட்டுச் சென்றததாகவும், பாகிஸ்தான் அதிகாரிகள் நேற்று (டிச. 23) தெரிவித்தனர்.

இந்த நிலையில், காவல் துறையினர் மீதான இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தானைச் சேர்ந்த எந்தவொரு பயங்கரவாத அமைப்பும் இதுவரை பொறுப்பேற்கவில்லை எனக் கூறப்படுகிறது. முன்னதாக, பலூசிஸ்தான் மற்றும் கைபர் பக்துன்குவா போன்ற மாகாணங்களில் பாதுகாப்புப் படையினர் மீதான பயங்கரவாதிகளின் தாக்குதல்கள் சமீபகாலமாக அதிகரித்து வருகின்றன.

கடந்த டிச. 3-ம் தேதி டெரா இஸ்மாயில் பகுதியில் காவல் துறை வாகனத்தின் மீது நடத்தப்பட்ட வெடிகுண்டு தாக்குதலில் 3 காவலர்கள் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### தேசிய விவசாயிகள் தினம்:
# உழவர் நலனை காக்கும் திராவிட மாடலின் சாதனைகள் தொடரும்
## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

**சென்னை, டிச. 24-**



உழவர் நலனை காக்கும் திராவிட மாடலின் சாதனைகள் தொடரும் என்று தேசிய விவசாயிகள் தினத்தை முன்னிட்டு

முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:- உழவே தலை. உலகத்தவரின் பசிப்பிணி போக்கும் வேளாண் பெருங்குடி மக்களுக்கு தேசிய விவசாயிகள் தின வாழ்த்துகள். வேளாண் துறைக்குத் தனி நிதிநிலை அறிக்கை, வேளாண் வணிகத் திருவிழா, வேளாண் கண்காட்சி, உழவன் செயலி, கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், இலவச மின்சார இணைப்புகள் என உழவர்களுக்காக நமது திராவிட மாடல் அரசின் முயற்சிகளால் வேளாண் உற்பத்தியில் தொடர்ந்து சாதனை புரிகிறது தமிழ்நாடு.

உழவர்களை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராகவும் போராடி, உழவர் நலனைப் பாதுகாக்கிறோம். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தைக் குலைத்து விவசாயக் கூலித் தொழிலாளர்களின் வயிற்றில் அடிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து இன்று கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன.

உழவர் நலனைக் காக்கும் திராவிட மாடலின் சாதனைகள் தொடரும்; உழவர் வாழ்வு செழிக்கும். என்று பதிவிட்டுள்ளார்.

### இந்து இளைஞர் கொலையை கண்டித்து
# டெல்லியில் வங்கதேச தூதரகத்தின் முன் இந்து அமைப்பினர் போராட்டம்
## போலீசாருடன் தள்ளுமுள்ளு - பரபரப்பு

**புதுடெல்லி, டிச. 24-**



வங்காள தேசத்தில் இந்து இளைஞர் கொலையை கண்டித்து டெல்லியில் உள்ள வங்காள தேச தூதரகம் முன் விஸ்வ இந்து பரிஷத் போராட்டம் நடத்தினர். இதனால் போராட்டத்தில் போலீசாருடன் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. தடுப்புகளை உடைத்து உள்ளே நுழைய முயன்றதால் பரபரப்பு ஏற்பட்டது.

வங்காள தேச தொழிற்சாலையில் பணியாற்றி வந்த இந்து மதத்தைச் சேர்ந்த தீபு சந்திர தாஸ் என்ற இளைஞரை அந்நாட்டு போராட்டக்காரர்கள் கடந்த வாரம் அடித்துக் கொலை செய்யப்பட்டார். இச்சம்பவம் சமூக வலைதளங்களில் வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்தநிலையில், இதனைக் கண்டித்து டெல்லி, திரிபுரா மற்றும் மேற்கு வங்காள தேசத்தில் உள்ள வங்கதேச தூதரகங்களுக்கு வெளியே இந்து அமைப்பினர் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதனால், மூன்று தூதரகங்களிலும் விசா சேவைகளை தற்காலிகமாக நிறுத்துவதாக வங்காள தேசம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில், டெல்லியில் உள்ள வங்காள தேச தூதரகத்துக்கு வெளியே பல்வேறு இந்து அமைப்பினர் ஒன்றிணைந்து இன்றும் போராட்டம் நடத்தினர். இதையடுத்து, அப்பகுதியைச் சுற்றிலும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மேலும், இந்தியாவில் வங்காள தேச தூதரகங்களுக்கு வெளியே நடைபெற்று வரும் போராட்டம் குறித்து விளக்கமளிக்க, வங்காள தேசத்தில் உள்ள இந்திய தூதரை நேரில் ஆஜராக அந்நாட்டு வெளியுறவுத் துறை சம்மன் அனுப்பியுள்ளது.

இதனிடையே வங்காள தேசத்தில் இந்து இளைஞர் கொலையை கண்டித்து டெல்லியில் உள்ள வங்காள தேச தூதரகம் முன் விஸ்வ இந்து பரிஷத் போராட்டம் நடத்தினர். இதனால் போராட்டத்தில் போலீசாருடன் தள்ளுமுள்ளு ஏற்பட்டு தடுப்புகளை உடைத்து உள்ளே நுழைய முயன்றதால் பரபரப்பு ஏற்பட்டது.

### இலங்கை கடற்படையால்
# 10 ராமேஸ்வரம் மீனவர்கள் கைது

**ராமேஸ்வரம், டிச. 24-**



எல்லை தாண்டி வந்ததாக கூறி ராமேஸ்வரம் மீனவர்கள் 10 பேரை இலங்கை கடற்படை கைது செய்தது.

கடலுக்கு மீன் பிடிக்க செல்லும் தமிழக மீனவர்களை, எல்லை தாண்டி வந்ததாக கூறி கைது செய்வதை இலங்கை கடற்படை வழக்கமாக கொண்டுள்ளது. இதனால், வாழ்வாதாரத்திற்காக கடலுக்கு செல்லும் மீனவர்கள் கடும் இன்னலை சந்தித்து வருகின்றனர். இலங்கை கடற்படையின் இந்த நடவடிக்கையை தடுக்க மத்திய, மாநில அரசுகள் தொடர்ந்து முயற்சிக்க வேண்டுமென மீனவர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனாலும், இந்த விவகாரத்தில் உரிய தீர்வுகள் இன்னும் எட்டப்படவில்லை.

இந்நிலையில், ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரத்தை சேர்ந்த 10 மீனவர்கள் நேற்று கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர், எல்லை தாண்டி வந்து மீன் பிடித்ததாக மீனவர்கள் 10 பேரையும் கைது செய்தனர். மீனவர்களின் படகையும் இலங்கை கடற்படையினர் பறிமுதல் செய்தனர். கைது செய்யப்பட்ட மீனவர்கள் 10 பேரும் இலங்கை கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட உள்ளனர்.

### பீகாரில் வாகன பேரணி நடத்தி
# பா.ஜ.க. வலிமையை காட்டிய நிதின் நபீன்

**பாட்னா, டிச. 24-**

பீகாரில் வாகன பேரணி நடத்தி பா.ஜ.க.வின் செயல் தலைவர் நிதின் நபீன் பா.ஜ.க. வலிமையை காட்டியுள்ளார்.

பா.ஜ.க.வின் செயல் தலைவராக சமீபத்தில் நிதின் நபீன் தேர்ந்தெடுக்கப்பட்டார். அக்கட்சியில் இளம் வயதில் இந்த பதவியை அவர் அடைந்து இருக்கிறார். 45 வயதுடைய அவர் 5 முறை எம்.எல்.ஏ.வாக இருந்தவர் ஆவார். பீகார் அமைச்சரவையில் சாலை கட்டுமான மந்திரியாகவும் அவர் உள்ளார். இந்நிலையில், கட்சி பொறுப்பை ஏற்று கொண்ட பின்னர் முதன்முறையாக அவர் நேற்று, பீகாரின் பாட்னா நகரில் வாகன பேரணியை நடத்தி கட்சியின் வலிமையை வெளிப்படுத்தினார்.

அவருடன் மத்திய உள் விவகார துறை இணை மந்திரி நித்யானந்த ராய், பீகார் பா.ஜ.க. தலைவர் சஞ்சய் சராவ்கி மற்றும் பீகார் துணை முதல்வர் விஜய் குமார் சின்ஹா ஆகியோரும் சென்றனர்.

இதுபற்றி பா.ஜ.க. எம்.பி. நித்யானந்த ராய் கூறும்போது, உலகின் பெரிய கட்சியாக பா.ஜ.க. உள்ளது.

எண்ணற்ற தலைவர்கள் மற்றும் தொண்டர்களின் வலிமையுடன் கட்சி உருவாகி உள்ளது. பாடலிபுத்திரா புனித பூமிக்கு நிதின் நபின் வருகை தந்துள்ளார். அவரை வரவேற்க ஒட்டுமொத்த பீகார் மக்களும் வந்துள்ளனர் என கூறியுள்ளார். அவர் நேற்று மாலை 4 மணியளவில் பீகார் கவர்னர் ஆரிப் முகமது கானை சந்தித்து பேசினார்.

# பொருநை அருங்காட்சியகத்தை பார்வையிட மக்களுக்கு அனுமதி
## பார்வையாளர் கட்டண விவரம் வெளியீடு

**நெல்லை, டிச. 24-**

பொருநை அருங்காட்சியகத்தை பார்வையிட பொதுமக்கள் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து கட்டணம் தொடர்பான அறிவிப்பு வெளியடப்பட்டுள்ளது. மேலு ம் நெல்லை ரெயில் நிலையம், நெல்லை பஸ்டாண்ட் பகுதிகளில் இருந்து சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

பொருநை அருங்காட்சியகத்தை நேற்று முதல் மக்கள் கண்டு ரசிக்கலாம் என தொல்லியல் துறை அறிவித்தது. இதனையொட்டி கல்லூரி மாணவர்களும், உள்ளூர் மக்கள் என்று பலர் பொருநை அருங்காட்சியகத்தை ஆர்வமுடன் கண்டு ரசித்து வருகின்றனர். காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரை பொருநை அருங்காட்சியகத்தை மக்கள் பார்வையிடலாம்.

பொருநை அருங்காட்சியகத்தை பார்வையிட சிறியவர்களுக்கு ரூ.10, மாணவர்களுக்கு ரூ.5 கட்டணம், பெரியவர்களுக்கு கட்டணமான ரூ. 20 நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டினருக்கு ரூ.50 நுழைவுச்சீட்டு கட்டணமாக வசூலிக்கப்படும். செவ்வாய் கிழமை மற்றும் தேசிய விடுமுறை நாட்களில் பொருநை அருங்காட்சியத்திற்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. அருங்காட்சியகத்தின் 5D, 7D தியேட்டருக்கு ரூ.25 தனி கட்டணம். பொருநை அருங்காட்சியகத்தை மக்கள் பார்வையிட வசதியாக நெல்லை ரெயில் நிலையம், நெல்லை பஸ்டாண்ட் பகுதிகளில் இருந்து சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

# கேரள முதல்வர் பினராயி விஜயன் மருத்துவமனையில் திடீர் அனுமதி

**சென்னை, டிச. 24-**

கேரள முதல்வர் பினராயி விஜயன் மருத்துவமனையில் நேற்று திடீரென அனுமதிக்கப்பட்ட நிலையில் வழக்கமான உடல்நலப் பரிசோதனைக்காக அவர் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் கேரள முதல்வர் பினராயி விஜயன் நேற்று அனுமதிக்கப் பட்டுள்ளார். முதல் உடல் பரிசோதனை மேற்கொள்வதற்காக அவர் அனுமதிக்கப்பட்டிருப்பதாக முதல்கட்டத் தகவல்கள் வெளியாகியுள்ளன. சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள பிரபல தனியார் மருத்துவமனையில் ஆண்டுதோறும் முழு உடல் பரிசோதனைக்காக பினராயி விஜயன் அனுமதிக்கப்படுவார்.

அந்த வகையில், வழக்கமான உடல்நலப் பரிசோதனைக்காக பினராயி விஜயன் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு ரத்த பரிசோதனைகள், இசிஜி உள்ளிட்ட பரிசோதனைகள் செய்யப்பட்டு வருகின்றது. இதுதொடர்பாக மருத்துவமனை தரப்பில் இருந்து விரிவான விளக்கத்துடன் விரைவில் அறிக்கை வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ‘குரூப் 4’ தேர்வுக்கான பாடத்திட்டத்தில் மாற்றம் இல்லை
## டி.என்.பி.எஸ்.சி. விளக்கம்

**சென்னை, டிச. 24-**

குரூப் 4 தேர்வுக்கான பாடத்திட்டத்தில் எந்த மாற்றமும் இல்லை என்று டி.என்.பி.எஸ்.சி. விளக்கம் அளித்துள்ளது.

ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தொகுதி I, II, IIA மற்றும் IV பணிகளுக்கான தேர்வு பாடத்திட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்படுவதாக தகவல் வெளியான நிலையில், இது குறித்து தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் விளக்கம் அளித்துள்ளது. தமிழ்நாடு அரசுத் துறைகளில் காலியாக உள்ள பணியிடங்களை எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு மூலம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்(டி.என்.பி.எஸ்.சி.) தேர்வு செய்து வருகிறது.

வரும் 2026-ம் ஆண்டுக்கான தேர்வு அட்டவணையை முன்னதாக டி.என்.பி.எஸ்.சி. வெளியிட்டு இருந்தது. அதில் தேர்வு விவரங்களையும் தெரிவித்திருந்தது. இதனிடையே, டி.என்.பி.எஸ்.சி. குரூப் தேர்வுகளுக்கான பாடத்திடத்தில் மாற்றம் கொண்டுவரப்படவுள்ளதாக இணையத்தில் தகவல் வெளியானது. இது தொடர்பாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் விளக்கம் அளித்துள்ளது.

அதில், “2026-ல் நடைபெறவுள்ள ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் - தொகுதி I, II, IIA மற்றும் IV பணிகளுக்கான தேர்வுகள், டிசம்பர் 2024-ல் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள பாடத்திட்டத்தின் அடிப்படையில் நடைபெறும். பாடத்திட்டம் மீண்டும் மாற்றப்படும் என சமூக வலைத்தளங்களில் பரவும் செய்திகளை நம்ப வேண்டாம்” என டி.என்.பி.எஸ்.சி. கேட்டுக்கொண்டுள்ளது.

### பணி நிரந்தரம் கோரி 6-வது நாளாக
# சென்னையில் போராட்டத்தில் ஈடுபட்ட செவிலியர்கள் கைது

**சென்னை, டிச. 24-**

பணி நிரந்தரம் கோரி 6-வது நாளாக சென்னையில் போராட்டத்தில் ஈடுபட்ட செவிலியர்கள் கைது செய்யப்பட்டனர்.

தி.மு.க. அரசு அளித்த வாக்குறுதிப்படி, பணி நிரந்தரம் வழங்க வேண்டும். சம வேலைக்கு சம ஊதியம் என்ற ஐகோர்ட்டு உத்தரவை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு செய்த மேல்முறையீட்டை கைவிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தொகுப்பூதிய செவிலியர்கள் நேற்று சென்னையில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு கழகம் சார்பில் நடந்த இந்த போராட்டத்தில் கலந்து கொண்ட 750-க்கும் மேற்பட்ட செவிலியர்களை கைது செய்த போலீசார் வாகனத்தில் ஏற்றி கிளாம்பாக்கத்தில் இறக்கி விட்டனர். இதையடுத்து, கிளாம்பாக்கம் பேருந்துநிலையத்தில் செவிலியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதைத்தொடர்ந்து அவர்களைக் கைது செய்து, ஊரப்பாக்கத்தில் உள்ள திருமண மண்டபத்தில் போலீஸார் அடைத்தனர். அங்கும் செவிலியர்கள் போராட்டத்தைத் தொடர்ந்தனர். செவிலியர்கள் கைது செய்யப்பட்டதை கண்டித்து, தமிழகம் முழுவதும் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் நேற்று செவிலியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதற்கிடையில், போராட்டத்தில் ஈடுபட்ட செவிலியர்களுடன் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது பொங்கல் பண்டிகைக்கு முன்பாக 723 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கப்படும் என அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார். இருப்பினும் அமைச்சருடனான பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது.

இந்த நிலையில், செங்கல்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரி அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் 6-வது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வந்த செவிலியர்களை போலீசார் கைது செய்தனர்.

# எடப்பாடி பழனிசாமி தலைமையில் தமிழக தேர்தலை எதிர்கொள்வோம்
## பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயல் பேட்டி

**சென்னை, டிச. 24-**



வரும் தமிழக சட்டமன்ற தேர்தலை எடப்பாடி பழனிசாமி தலைமையில் எதிர்கொள்வோம் என்று தமிழக பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார். மேலும் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி அமோக வெற்றிபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழக பா.ஜனதா தேர்தல் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் நேற்று சென்னை வந்தார். அவர் தியாகராயகரில் உள்ள பா.ஜனதா அலுவலகத்தில் பா.ஜ.க. நிர்வாகிகளுடன் சட்டமன்ற தேர்தல் பணி, களநிலவரம், வெற்றி வாய்ப்பு உள்ளிட்டவை குறித்து ஆலோசனை நடத்தினார். அதனை தொடர்ந்து அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தமிழக பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயலை சென்னை லீலா பேலசில் தொகுதி பங்கீடு தொடர்பாக சுமார் ஒன்றரை மணிநேரமாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இந்த நிலையில், மத்திய அமைச்சரும், தமிழக பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளருமான பியூஷ் கோயல் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது;- எனது நண்பரும், சகோதரருமான எடப்பாடி பழனிசாமியை சந்தித்ததில் மகிழ்ச்சி. இந்த சந்திப்பு சிறப்பாக நடந்தது. 2026 தேர்தலை எதிர்கொள்வது குறித்து ஆலோசனை செய்தோம். 2026 தேர்தலை பிரதமர் மோடியின் வழிகாட்டுதலுடன் தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்ள உள்ளோம். எடப்பாடி பழனிசாமி தலைமையில் தேர்தலை எதிர்கொள்வோம். வளர்ச்சி, வேலைவாய்ப்பே பா.ஜ.க.வின் இலக்கு.

வருகிற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி அமோக வெற்றிபெறும். ஊழல் திமுக கூட்டணியை தோற்கடிப்போம். இவ்வாறு அவர் பேசினார்.

### உலகிற்கு உணவளிக்கும் உழவு தெய்வங்கள்:
# தேசிய விவசாயிகள் தினத்தில் எடப்பாடி பழனிசாமி வாழ்த்து

**சென்னை, டிச. 24-**



உலகிற்கு உணவளிக்கும் உழவு தெய்வங்கள் என்று தேசிய விவசாயிகள் தினத்தை முன்னிட்டு எடப்பாடி பழனிசாமி வாழ்த்து தெரிவித்துள்ளஆர்.

தேசிய விவசாயிகள் தினம் ஆண்டு தோறும் டிசம்பர் 23ம் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் தேசிய விவசாயிகள் தினம் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. இதையொட்டி அதிமுக பொதுச் செயலாளரும், முன்னாள் முதல்வருமான எடப்பாடி பழனிசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில் கூறியிருப்பதாவது:- உலகிற்கு உணவளிக்கும் உழவுத் தெய்வங்கள், மண்ணோடு உயிர் கலந்த உழைப்பால் தேசத்தின் பொருளாதாரத்திற்கும், மக்களின் வாழ்விற்கும் அடித்தளமாக நிற்கும் விவசாயப் பெருமக்களுக்கு தேசிய விவசாயிகள் தின வாழ்த்துகள் இன்னல்களையும் , இயற்கைச் சோதனைகளையும் தாண்டி, அர்ப்பணிப்பு கொண்டு உழைக்கும் அவர்களின் தியாகம் அளவிட முடியாதது.

நம் விவசாயிகளின் நலன், பாதுகாப்பு, எதிர்காலம் ஆகியவற்றை உறுதி செய்வதே நம் தேசத்தின் முன்னேற்றத்திற்கான அடிப்படை. உழவர் வாழ்வு உயர, தேசம் உயர உறுதியை மீண்டும் எடுத்துக்கொள்வோம். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சேலத்தில் டிச. 29-ம் தேதி நடைபெறும்
# பாட்டாளி மக்கள் கட்சியின் பொதுக்குழு கூட்டம் அல்ல
## அன்புமணி தரப்பு விளக்கம்

சென்னை, டிச. 24-

சேலத்தில் 29-ம் தேதி நடைபெறவுள்ள கூட்டம் பாட்டாளி மக்கள் கட்சியின் பொதுக்குழு கூட்டம் அல்ல. அதில் எடுக்கப்பட்ட முடிவுகள் பாட்டாளி மக்கள் கட்சியை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்று அன்புமணி தரப்பு விளக்கம் அளித்துள்ளது.

பாட்டாளி மக்கள் கட்சி தலைமை அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:- பாட்டாளி மக்கள் கட்சியின் பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டங்கள் வரும் 29-ம் தேதி சேலம் ஐந்து சாலை இரத்தினவேல் ஜெயக்குமார் திருமண அரங்கத்தில் நடைபெறும் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. அத்தகைய அறிவிப்பு எதையும் பாட்டாளி மக்கள் கட்சி தலைமை வெளியிடவில்லை.

பாட்டாளி மக்கள் கட்சியின் அமைப்பு விதிகள் 15, 16 ஆகியவற்றின் அடிப்படையில் பாட்டாளி மக்கள் கட்சியின் பொதுக்குழு உள்ளிட்ட எந்தக் கூட்டமும் பொதுக்குழுவால் தேர்வு செய்யப்பட்ட கட்சியின் தலைவர், பொதுச் செயலாளர் ஆகியோரால் கூட்டப்பட்டு, பொதுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சித் தலைவரின் தலைமையில் தான் நடத்தப்பட வேண்டும். சென்னை ஐகோர்ட்டிலும், டெல்லி ஐகோர்ட்டிலும் ஒரு தரப்பினர் தொடர்ந்த வழக்கில் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் தான் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

பொதுக்குழுவைக் கூட்டவும், அதற்கு தலைமையேற்கவும் அவரைத் தவிர வேறு யாருக்கும் அதிகாரம் இல்லை. பாட்டாளி மக்கள் கட்சியின் பெயரை தவறாகப் பயன்படுத்தி சேலத்தில் சட்டவிரோதமாக செயற்குழு மற்றும் பொதுக்குழு என்ற பெயரில் ஒன்று கூடல் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது குறித்தும் தேர்தல் ஆணையத்திற்கு பா.ம.க. தலைமை முறைப்படி தெரிவித்திருக்கிறது.

எனவே, சேலத்தில் 29-ம் தேதி நடைபெறவுள்ள கூட்டம் பாட்டாளி மக்கள் கட்சியின் பொதுக்குழு கூட்டம் அல்ல. அதில் எடுக்கப்பட்ட முடிவுகள் பாட்டாளி மக்கள் கட்சியை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்பதை பாட்டாளி மக்கள் கட்சியின் தலைமை அலுவலகம் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தங்கம் விலை மீண்டும் புதிய உச்சம்

**சென்னை, டிச. 24-**


தங்கத்தின் விலை ஒரு லட்சத்தைக் கடந்த நிலையில் நேற்று சவரனுக்கு மேலும் ரூ. 1,600 உயர்ந்து புதிய உச்சத்தை தொட்டு விற்பனையானது.

நேற்று முன்தினம் (திங்கள்கிழமை) காலை 22 காரட் தங்கம் விலை சவரனுக்கு ரூ. 640 உயர்ந்த நிலையில், மாலை மேலும் ரூ. 720 உயர்ந்தது. அதாவது நேற்று முன்தினம் ஒரேநாளில் சவரனுக்கு ரூ. 1,360 அதிகரித்து ரூ.1,00,560- க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில் நற்று (செவ்வாய்க்கிழமை) தங்கம் விலை சவரனுக்கு மேலும் ரூ. 1,600 உயர்ந்து ரூ. 1,02,160-க்கு விற்பனையானது.

கிராமுக்கு ரூ. 200 உயர்ந்து ரூ. 12,770-க்கு விற்பனையானது. தங்கத்தின் விலை இது புதிய உச்சமாகும். முன்னதாக கடந்த டிச. 15 ஆம் தேதி ஒரு சவரன் தங்கம் விலை ரூ. 1,00,120 ஆக உயர்ந்து பின்னர் குறைந்த நிலையில் நேற்று மீண்டும் ஒரு லட்சத்தைக் கடந்தது குறிப்பிடத்தக்கது. தங்கத்தின் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளது மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும் கலக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.


வெள்ளி விலையும் நேற்று காலை கிராமுக்கு ரூ. 3 உயர்ந்து ஒரு கிராம் ரூ. 234 - க்கும், கிலோவுக்கு ரூ. 3,000 உயர்ந்து ஒரு கிலோ ரூ.2,34,000 -க்கும் விற்பனையானது. வெள்ளி விலையும் புதிய உச்சம் தொட்டுள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....




டித்வா புயலில் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கும் இழப்பீட்டிற்கு பதிலாக ஏமாற்றம் தான் கிடைக்குமோ? என உழவர்கள் அஞ்சுகின்றனர். எனவே, பாதிக்கப்பட்ட உழவர்களின் உணர்வுகளையும், துயரத்தையும் அரசு புரிந்து கொண்டு அவர்களுக்கு ஏக்கருக்கு ரூ.40,000 வீதம் இழப்பீடு வழங்க வேண்டும்.

- அன்புமணி




தேர்தல் நேரத்தில் அரசியல் காரணங்களுக்காக பல பொய்யான விமர்சனங்களை சில பேர் வைப்பார்கள். அதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. உண்மையான நிலவரம் என்ன என்று ஊடகத்துறையைச் சேர்ந்த அத்தனை நண்பர்களுக்கும் தெரியும். இதற்கு மேல் விளக்கமாக சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

- கனிமொழி



காங்கிரஸ் கட்சி தான் அமலாக்கத்துறை, மத்திய புலனாய்வுத்துறை போன்ற துறைகளை உருவாக்கியது. அவற்றை ஒரு போதும் சொந்த துறைகளாக பார்க்கவில்லை. ஆனால் பா.ஜ.க. அதை தங்களுக்கு சொந்தமானதாக பார்க்கிறார்கள். அரசியல் அதிகாரத்தை கட்டியெழுப்ப அமலாக்கத்துறையையும், சி.பி.ஐ.யையும் ஒரு கருவியாக பயன்படுத்துகின்றனர்.

- ராகுல் காந்தி



தமிழ்நாட்டு மக்கள் இருவரை அடையாளம் கண்டுவிட்டார்கள். ஒருவர் விஜய், இன்னொருவர் சீமான். தி.மு.க. ஒரு தீய சக்தி என்பதுதான் விஜய்யின் ஒரே நோக்கம். தி.மு.க.வை வீழ்த்த நினைக்கும் ஆர்.எஸ்.எஸ்.காகதான் விஜய் கட்சி துவங்கியிருக்கிறீர்கள். விஜய்யும், சீமானும் பா.ஜ.க. பெற்றெடுத்த பிள்ளைகள் என்பது அம்பலமாகியுள்ளது.

- திருமாவளவன்



சென்னை துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வால்டாக்ஸ் சாலை தண்ணீர் தொட்டி தெரு மற்றும் அண்ணா பிள்ளை தெரு பகுதியில் ரூ.165 கோடி மதிப்பீட்டில் கட்டபப்பட்டு வரும் 700 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், பல்நோக்கு மையம் உள்ளிட்டவற்றை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கூடுதல் தலைமை செயலாளர் காகர்லா உஷா, முதன்மை செயலாளர் பிரகாஷ் கலந்து கொண்டனர்.

# சென்னை வடபெரும்பாக்கத்தில் ரூ.22.41 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட உயர்மட்ட மேம்பாலம்: அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்

**சென்னை,டிச.24**

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்.கே.என்.நேரு அவர்கள், மணலி மற்றும் மாதவரம் மண்டலம், வார்டு-17 மற்றும் 23ல் புழல் உபரிநீர் கால்வாயின் குறுக்கே வடபெரும்பாக்கத்தில் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்ட நிதி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதிகளில் ரூ.22.41 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட உயர்மட்ட மேம்பாலத்தினை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மணலி மற்றும் மாதவரம் மண்டலம், வார்டு-17 மற்றும் 23ல் புழல் உபரிநீர் கால்வாயின் குறுக்கே உள்ள தரைப்பாலம் மூலமாக வாகனப் போக்குவரத்திற்கு பொதுமக்கள் பயன்படுத்தி வந்தனர். மழைக்காலங்களில் அதிகளவு நீர் கால்வாயில் செல்வதால் தரைப்பாலம் நீரில் மூழ்கி, வாகனப் போக்குவரத்து தடைபடுவதுடன் பொதுமக்களும் கால்வாயை கடந்து செல்ல மிகவும் சிரமப்பட்டு வந்தனர். இப்பகுதி மக்களின் கோரிக்கையை நிறைவேற்றிடும் வகையில் வடபெரும்பாக்கத்தில் புழல் உபரி கால்வாயின் குறுக்கே சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதிகளின் கீழ் ரூ.22.41 கோடி மதிப்பீட்டில் புதிதாக பாலம் கட்டப்பட்டுள்ளது.

இந்தப் பாலமானது 190 மீ. நீளமும் 7.5 மீ. அகலத்துடன் இரண்டு வாகனங்கள் பாலத்தை கடந்து செல்லும் வகையில் நல்ல உறுதித்தன்மையுடன் அறிவியல் முறைப்படி புதிதாக உயர்மட்ட பாலம் கட்டப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் சிரமத்தினை போக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த பாலம் மூலமாக மணலி மற்றும் மாதவரம் பகுதியில் வசிக்கும் சுமார் 1 இலட்சம் மக்கள் மிகவும் பயனடைவர்.

முன்னதாக, நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர், மணலி மண்டலம், வார்டு-17க்குட்பட்ட செட்டிமேடு கிராமத்தில் ரூ.1.61 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நாய்கள் இனக்கட்டுப்பாட்டு மையத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இந்த மையமானது 3582 சதுர அடி பரப்பளவில் 20 எண்ணிக்கையிலான நாய்கள் பட்டிகள் கொண்ட அறை,





தயாரிப்பு அறை, அறுவை சிகிச்சை அரங்கம், ஆய்வகம், சமையலறை, பொருள்கள் இருப்பு அறை, காவலாளி அறை உள்ளிட்ட 26 அறைகளுடன் கட்டப்பட்டுள்ளது.

மேலும், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் மணலி மண்டலம், வார்டு-20க்குட்பட்ட மணலி ஏரியில் அம்ரூத் மற்றும் மாநகராட்சி மூலதன நிதியின் கீழ், ரூ.6.70 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ச்சியாக, மாதவரம் மண்டலம், வார்டு-27க்குட்பட்ட மாதவரம் ஏரியில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.11.78 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் மாதவரம் ஏரியில் பொதுமக்கள் பொழுதுபோக்கிற்காக படகு சவாரி மேற்கொள்வது தொடர்பாக படகு சவாரி செய்து ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, மணலி மண்டலம், வார்டு-16க்குட்பட்ட கடப்பாக்கம் ஏரியில் ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் உலகளாவிய சுற்றுச் சூழல் வசதி நிதியில் ரூ.58.33 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அங்கு மரக்கன்றினை நட்டார்.

இந்த ஆய்வுகளின் போது, மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள்எஸ்.சுதர்சனம் (மாதவரம்), கே.பி.சங்கர் (திருவொற்றியூர்), துணை மேயர்.மு.மகேஷ்குமார், ஆணையாளர்.ஜெ.குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், துணை ஆணையாளர் (பணிகள்) .வி.சிவகிருஷ்ணமூர்த்தி, வடக்கு வட்டார துணை ஆணையாளர்கட்டா ரவி தேஜா, செயல் இயக்குநர்கௌரவ் குமார், நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர்கள்ஏ.வி.ஆறுமுகம்,எஸ்.நந்தகோபால், மாமன்ற உறுப்பினர்கள்ஆ.ராஜேந்திரன், அ.சந்திரன்,ர.ஜெய்சங்கர், ப.ராஜன் உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

# காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரில் 99 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்கள்: கலெக்டர் கலைச்செல்வி வழங்கினார்



**காஞ்சிபுரம் டி24 -**

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் அடுத்த கரும்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த 99 பயனாளிகளுக்கு ரூ.92.86 இலட்சம் மதிப்பிலானஇலவச வீட்டு மனைப் பட்டாக்களை கலெக்டர் கலைச்செல்வி வழங்கினார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2021 - 22ம் ஆண்டில் நிலமற்ற 1, 850 பயனாளிகளுக்கு 21.73 கோடி மதிப்பீட்டிலும், 2022 - 23ம் ஆண்டில் நிலமற்ற 4,490 பயனாளிகளுக்கு 43.64 கோடி மதிப்பீட்டிலும், 2023 - 24ம் ஆண்டில் நிலமற்ற 2,254 பயனாளிகளுக்கு 29.91 கோடி மதிப்பீட்டிலும், 2024ம் ஆண்டில் நிலமற்ற 5,222 பயனாளிகளுக்கு 33.21 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் 2025ம் ஆண்டில் நிலமற்ற 16,828 பயனாளிகளுக்கு 285.13 கோடி மதிப்பீட்டிலும் அரசு நிலத்தில் பட்டாகள் வழங்கப்பட்டுள்ளது.

2021 முதல் 2025 ஐந்தாண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மொத்தம் 30,644 பயனாளிகளுக்கு 413.62 கோடி மதிப்பீட்டில் அரசு நிலத்தில் இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. இவற்றுள் 4,739 பழங்குடியின பயனாளிகள் ( பிரதான் மந்திரி ஜன்மன் திட்டத்தின் கீழ் 440 பயனாளிகள் ), 211 மாற்றுத்திறனாளி பயனாளிகள், 138 திருநங்கை பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து நேற்று காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், அரும்புலியூர் ஊராட்சிக்கு உட்பட்ட கரும்பாக்கத்தில் மாவட்ட கலெக்டர் கலைச்செல் மற்றும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் சுந்தர் ஆகியோர், 99 பயனாளிகளுக்கு ரூ.92.86 இலட்சம் மதிப்பிலான இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினர்.

வீட்டுமனைப் பட்டா பெற்ற பயனாளி திவ்யா மற்றும் நளினி ஆகியோர் கூறும் போது: ‘இந்த கிராமத்தில் வசிக்கும் பெரும்பாலனோர் 70 வருடங்களாக இங்கு வசித்து வருகிறார்கள். நாங்கள் வசிக்கும் இடத்திற்கு பட்டா ஏதும் இல்லாததால் தேவையான வசதிகள் செய்து கொள்ள முடியாமல் குழந்தைகளுடன் நிம்மதியற்ற சூழ்நிலையில் வாழ்ந்து வந்தோம். எனவே, 70 ஆண்டுகள் கழித்து எங்களுக்கு பட்டா வழங்க கோரி “உங்களுடன் ஸ்டாலின்” முகாமில் மனுக்கள் அளித்திருந்தோம். இன்று எங்கள் கிராமத்தில் பட்டா இல்லாமல் வசிக்கும் அனைவருக்கும் வீட்டுமனைப் பட்டாக்களை, கலெக்டர் கலைச்செல்வி, உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் வழங்கியுள்ளனர். பட்டா பெற்ற நாங்கள் எங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி கொள்ளவும் மிகவும் பயனுள்ளதாக அமையும். எனவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.’ என்றனர்.

இந்நிகழ்வில் காஞ்சிபுரம் சப் - கலெக்டர் ஆஷிக் அலி, உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் 23 ஆயிரம் துப்புரவு பணியாளர்களுக்கு தினமும் தரமான உணவு

**சென்னை டிச 24-**

சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் துப்புரவு பணியாளர்கள் 23 ஆயிரம் பேருக்கு தினமும் சூடான உணவு வழங்கப்பட்டு வருகிறது. இந்த திட்டம் பணியாளர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

தமிழகத்தில் உள்ள மாநராட்சி, நகராட்சிகளில் துப்புரவு பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். திமுக அரசு பதவி ஏற்ற பிறகு, அவர்களுக்கு ஏராளமான திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்து வருகிறார். இரவு பகல் பாராமல் பணியாற்றும் துப்புரவு பணியாளர்கள் நேரத்துக்கு சாப்பிடுவதில்லை என்றும், அவர்கள் தரமான உணவு சாப்பிடுவது இல்லை என்றும் தெரியவந்தது. இதனால், அவர்களுக்கு தரமான வகையில் தேவையான அளவுக்கு சாப்பாடு வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார்.இதை தொடர்ந்து, சென்னையில் மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் தலைமையில் இதற்கான ஏற்பாடுகளை செய்ய துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உத்தரவிட்டார். அதை தொடர்ந்து சென்னையில் 5 இடங்களில் உணவுகளை தயாரித்து நகரில் உள்ள அனைத்து துப்புரவு ஊழியர்களுக்கும் தரமான உணவுகள் வழங்கப்பட்டன. ஆனால், சில இடங்களில் உணவு செல்ல தாமதமாவது ஆய்வில் தெரியவந்தது. இதனால் உணவு தயாரிக்கும் கூடங்களை அதிகரித்து கமிஷனர் குமரகுருபரன் உத்தரவிட்டார்.

தொடர்ந்து, நகரில் 15 இடங்களில் உணவு தயாரிக்கும் கூடம் உருவாக்கப்பட்டது.இந்த கூடங்களில் இருந்து காலை 2 ஆயிரம் பேருக்கும், மதியம் 16 ஆயிரம் பேருக்கும், இரவு 5 ஆயிரம் பேருக்கும் உணவு தயாரிக்கப்பட்டு, டிபன்பாக்சில் எடுத்துவரப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. அதில் காலையில் பொங்கல், கிச்சடி, உப்புமா வழங்கப்படுகிறது. மதிய நேரத்தில் லெமன், தங்காளி, கரிவேப்பிலை சாதம் மற்றும் உருளைக்கிழங்கு கூட்டு, அப்பளம் வழங்கப்படுகிறது. இரவு இட்லி, சேமியா, தோசை ஆகியவை வழங்கப்படுகிறது. ஓட்டலில் வழங்கப்படுவது போல தரமான உணவுகளை தயாரித்து சூடான வகையில் அவர்கள் பணியாற்றும் பகுதிகளுக்கே சென்று வழங்கப்படுகிறது.அதோடு, அவர்கள் சாலையில் நின்று சாப்பிடக்கூடாது என்பதற்காக மாநகராட்சி அலுவலகத்தில் இருக்கைகள், மேஜைகள் போடப்பட்டு சுத்தமாகவும், சுகாதாரமாகவும் உணவுகள் வழங்கப்படுகின்றன. இதை அதிகாரிகள் கண்காணிக்கவும் உத்தரவிடப்பட்டு வருகின்றன. மேலும், சத்துணவு பணியாளர்களுக்கு முட்டை வழங்க நடவடிக்கை எடுக்கும்படி முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். விரைவில் இந்த திட்டமும் முதல்வர் மு.க.ஸ்டாலினால் தொடங்கி வைக்கப்பட உள்ளதாகவும் கூறப்படுகிறது. நாட்டிலேயே துப்புரவு பணியாளர்களுக்கு சுகாதாரமான முறையில், சூடாக 3 நேரமும் உணவு வழங்கப்படுவது இதுதான் முதன் முறை என்கின்றனர் சென்னை மாநகராட்சி அதிகாரிகள்.

# கிறிஸ்துமஸ் தினத்தன்று ஞாயிறு அட்டவணைப்படி சென்னை புறநகர் மின்சார ரயில்கள் இயக்கப்படும்

**சென்னை டிச 24-**

நாளை கிறிஸ்துமஸ் தினத்தன்று ஞாயிறு அட்டவணைப்படி சென்னை, புறநகர் மின்சார ரயில்கள் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னை கடற்கரை – செங்கல்பட்டு, சென்ட்ரல் – அரக்கோணம், கும்மிடிப்பூண்டி, சூலூர்பேட்டைக்கு ஞாயிறு அட்டவணைப்படி ரயில் இயக்கப்பட உள்ளது.

# பணம் கொடுக்கல் வாங்கல் தகராறில் வாலிபரை மிரட்டி பணம் பறித்த இருவர் கைது

**சென்னை டிச 24-**

சென்னை, திருவல்லிக்கேணி, 4வது தெரு, ராம்நகர் பகுதியில் மாதேஷ், என்பவர் மயிலாப்பூரில் உள்ள வணிக வளாகத்தில் ஹவுஸ் கீப்பிங் வேலை செய்து வருகிறார். இவர் கடந்த 20.ந் தேதி அன்று இரவு அவரது மனைவியுடன் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, அங்கு நின்று கொண்டிருந்த அறிமுகமான அஜய் மற்றும் நவீன் ஆகிய இருவரும் மேற்படி மாதேஷை வழிமறித்து, அஜய் தரவேண்டிய பணம் ரூ.5,ஆயிரம் ஐ மாதேஷிடம் கேட்டுள்ளனர். மாதேஷ் தன்னிடம் இப்போது பணம் இல்லை பிறகு தருகிறேன் என்று கூறியபோது, அஜய் மற்றும் நவீன் ஆகியோர் மாதேஷை அவதூறாக பேசி கத்தியைக் காட்டி மிரட்டி மாதேஷ் பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.500 ஐ பறித்துக் கொண்டு கொலை மிரட்டல் விடுத்து அங்கிருந்து தப்பிச்சென்றனர். இது குறித்து மாதேஷ், ஐஸ்அவுஸ் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

ஐஸ்அவுஸ் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட 1.அஜய், 2.நவீன், ஆகிய இருவரை கைது செய்தனர். விசாரணையில் எதிரி அஜய் ஐஸ் அவுஸ் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது ஏற்கனவே 3 கொலை முயற்சி வழக்குகள் உட்பட 8 குற்ற வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது.

# சென்னையில் இரண்டு இன்ஸ்பெக்டர்கள் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றம்

**சென்னை டிச 24-**

வளசரவாக்கம் மகளிர் காவல் ஆய்வாளர், சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளர் அதிரடியாக காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

திமுக பிரமுகரின் விடுதியில் சிக்கிய கும்பலில் சிலரை விடுவித்து 1 லட்ச ரூபாய் பணத்தை எடுத்து கொண்டு 4 ஆயிரம் ரூபாயை கணக்கு காட்டியதாக குற்றசாட்டில் சட்டம் ஒழுங்கு ஆய்வாளர் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பாலியல் சீண்டலுக்கு உள்ளான சிறுமியை மருத்துவப்பரிசோதனைக்கு உட்படுத்தியதோடு, சிறுமியை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்ததோடு,முறையான நடவடிக்கை எடுக்கவில்லை என மகளிர் காவல் ஆய்வாளர் மாற்றம்.சென்னை வளசரவாக்கம் பகுதியில் ஒருங்கிணைந்த குற்றப்புலனாய்வு பிரிவு போலீசார் சோதனையில் சூதாட்ட கும்பலை பிடித்தனர். ((சண்முகா டெக்ரேஷன் சென்டரில்)) தனியார் விடுதியில் நடந்த சோதனையில் ரூ 1,4098, 26 செல்போன், பிளேயிங் காயின் மதிப்பு ரூ 3,68296 போன்றவற்றை பறிமுதல் செய்தனர். 17 பேரை பிடித்து வளசரவாக்கம் காவல் ஆய்வாளர் அன்புக்கரசுவிடம் ஒப்படைத்தனர். ஆனால் அவர் 4 ஆயிரம் பறிமுதல் செய்த தொகை என்றும் 3 பேரை மட்டுமே கைது செய்ததாக காவல்துறை உயர்அதிகாரிகளுக்கு அறிக்கை கொடுத்ததாக தெரிகிறது.

இது குறித்து அறிந்து மேற்கு மண்டல காவல் இணை ஆணையர் திஷா மிட்டல் துறைரீதியிலாக விசாரணை நடத்தி காவல் ஆய்வாளர் அன்புக்கரசுவை காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றம் செய்தார். இதே போல வளசரவாக்கம் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் ஆனந்தியும் காத்திருப்போர் பட்டிய்லுக்கு மாற்றப்பட்டுள்ளார். மாநகர பேருந்தில் சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த வழக்கில் முறையாக விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்காததால் காவல் ஆய்வாளர் ஆனந்தி காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# வானகரம் பகுதியில் கார் டிரைவரிடம் வழிப்பறி: இரு திருநங்கைகள் கைது

**சென்னை டிச 24-**

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகத்தைச் சேர்ந்த ஜெகன், என்பவர் சொந்தமாக கார் வைத்துக் கொண்டு, செங்கல்பட்டில் உள்ள கார் நிறுவனத்தில் ஊழியர்களை அழைத்துச் சென்று வருவதாகவும், கடந்த 19.ந் தேதி அன்று இரவு செங்கல்பட்டு நிறுவனத்திலிருந்து வாடிக்கையாளரை அழைத்துக் கொண்டு சென்னை, அம்பத்தூரில் இறக்கிவிட்டு, மீண்டும் செங்கல்பட்டு செல்வதற்காக 20.ந் தேதி அன்று அதிகாலையில் மதுரவாயல் மேம்பாலம் அருகே வரும்போது, தூக்கம் வருவதால் சிறிது நேரம் காரை மதுரவாயல் மேம்பாலம் கீழே நிறுத்திவிட்டு தூங்கியபோது, அங்கு வந்த 2 திருநங்கைகள் உல்லாசத்திற்கு அழைப்பது போல அழைத்து, பணம் கேட்டு மிரட்டியதாகவும், ஜெகன் பணமில்லை என்ற போது, பணம் தரவில்லை என்றால் கார் கண்ணாடியை உடைத்துவிடுவதாக மிரட்டி, ஜெகனின் செல்போனை பறித்து கடவுச்சொல்லை கேட்டு, அவரது Gpayலிருந்து, ஒரு திருநங்கையின் வங்கி கணக்கிற்கு ரூ.11ஆயிரம் பணத்தை அனுப்பிக் கொண்டு இதை பற்றி வெளியே சொன்னால் கொலை செய்துவிடுவதாக மிரட்டி செல்போனை கொடுத்துவிட்டு சென்றதாகவும், பாதிக்கப்பட்ட ஜெகன் என்பவர் வானகரம் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். வானகரம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட திருநங்கைகள், 1.கயல்விழி, 2.அனுஷிகா, ஆகியோரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து பணம் ரூ.8,ஆயிரம் மீட்கப்பட்டு, குற்றச் செயலுக்கு பயன்படுத்திய எதிரியின் செல்போன் பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட திருநங்கைகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

# கொளத்தூர் பகுதியில் வாலிபரிடம் கத்தி முனையில் பணம் பறிப்பு: ரவுடி கைது

**சென்னை டிச 24-**

சென்னை, கொளத்தூர், ஜி.கே.எம் காலனி பகுதியில் சீனிவாசன், என்பவர் தனது குடும்பத்துடன் வசித்து வருவதாகவும், சீனிவாசன் நேற்று முன் தினம் காலை மருத்துவமனைக்கு செல்ல கொளத்தூர், தைலம் தோப்பு வழியாக நடந்து சென்று கொண்டிருந்தபோது, அவரது பழைய வாடகை வீட்டின் அருகே வசித்து வந்த சுலைமான் என்பவர் சீனிவாசனை வழிமறித்து, ‘‘நான் எப்ப காசு கேட்டாலும் தரமாட்டேன்கிறாய்‘‘ எனக்கூறி தகாத வார்த்தைகளால் பேசி, கையால் தாக்கியும், அவர் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை காட்டி மிரட்டியும் சீனிவாசன் சட்டை பையில் வைத்திருந்த பணம் ரூ.1,000 ஐ பறித்து கொண்டு மிரட்டிச் சென்றதாகவும், சீனிவாசன் என்பவர் கொளத்தூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில், வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். கொளத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி ருக்மாகாந்தன் (எ) சுலைமான், என்பவரை கைது செய்தனர்.

# ஆர்.கே. நகர் பகுதியில் சட்டவிரோதமாக உடல் வலி நிவாரண மாத்திரைகள் விற்ற 5 பேர் கைது

**சென்னை டிச 24-**

சென்னை ஆர்.கே.நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர், நேற்று முன் தினம் ஐ.ஒ.சி. யார்டு அருகே கண்காணித்து, அங்கு சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்த 5 நபர்களை விசாரணை செய்து, அவர்களை சோதனை செய்தபோது, அவர்கள் உடல் வலி நிவாரண மாத்திரைகள் மறைத்து வைத்து விற்பனை செய்துகொண்டிருந்தது தெரியவந்தது.

அதன்பேரில், ஆர்.கே.நகர் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து, சட்டவிரோதமாக உடல்வலி நிவாரண மாத்திரைகள் வைத்திருந்த எதிரி 1.கணேஷ் (எ) பிளாக் கேட், 2.சந்தோஷ் (எ) கொக்கு, 3.கார்த்தி (எ) மொட்டை கார்த்தி, 4.ஆனந்தகுமார் (எ) E.B.ஆனந்த், 5.நதீம், ஆகிய 5பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 160 எண்ணிக்கைகள் கொண்ட உடல்வலி நிவாரண மாத்திரைகள், மாத்திரைகள் விற்பதற்கு பயன்படுத்திய இருசக்கர வாகனம் மற்றும் 1 ஆட்டோ பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி சந்தோஷ் (எ) கோக் என்பவர் ஆர்.கே. நகர் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது கொலை, போதை பொருள் வழக்கு உட்பட 8 குற்ற வழக்குகளும், கார்த்திக் (எ) மொட்டை கார்த்திக் மீது 6 குற்ற வழக்குகளும், ஆனந்தகுமார் (எ) ஈ.பி.ஆனந்த் மீது ஒரு குற்ற வழக்கும், நதீம் மீது 2 குற்ற வழக்குகளும் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட 5 எதிரிகளும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

# சி.எப் பகுதியில் கூலி தொழிலாளி மீது தாக்குதல்: இருவர் கைது

**சென்னை டிச 24-**

சென்னை, பெரம்பூர், ராஜீவ்காந்தி நகர், மெயின் தெருவில் வசித்து வரும் பார்த்திபன், வ/40 என்பவர் பெயிண்டராக வேலை செய்து வருகிறார். பார்த்திபன் கடந்த 19.12.2025 அன்று மாலை வீட்டின் அருகில் உள்ள மாநகராட்சி கழிவறை அருகே நடந்து சென்று கொண்டிருந்தபோது, தெரிந்த நபர்களான இமானுவேல் மற்றும் இளமாறன் ஆகியோர் மணவாளன் என்பவரிடம் தகராறு செய்து கொண்டிருந்தனர். இதைக்கண்ட பார்த்திபன் சண்டை போடாதீர்கள், வீட்டிற்கு செல்லுங்கள் என கூறிய போது மணவாளன் சென்ற நிலையில், இமானுவேல் மற்றும் இளமாறன் ஆகியோர் பார்த்திபனை அவதூறாக பேசி, நீ எப்படி எங்களை போக சொல்லி மணவாளனுக்கு ஆதரவாக பேசலாம் எனக் கேட்டு, இருவரும் பார்த்திபனை கையால் தாக்கியதில் பார்த்திபனுக்கு 2 பற்கள் விழுந்து இரத்தக்காயம் ஏற்படவே, இருவரும் கொலை மிரட்டல் விடுத்து தப்பிச் சென்றனர். தாக்குதலில் இரத்த காயமடைந்த பார்த்திபன் பெரியார் நகர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நிலையில், மேற்படி சம்பவம் குறித்து மருத்துவமனையில் இருந்து புகார் கொடுத்ததின் பேரில், ஐ.சி.எப் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

ஐ.சி.எப் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட 1.இமானுவேல், 2.இளமாறன், ஆகிய இருவரை கைது செய்தனர்.

# கொலை வழக்கில் நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட குற்றவாளி கைது

**சென்னை டிச 24-**

சென்னை மதுரவாயல் காவல் நிலையத்தில் தாக்கலான முரளி என்பவரை மீதுகடந்த 2019ம் ஆண்டு, கொலை செய்த வழக்கில் தொடர்புடைய எதிரி சிம்சன் என்பவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்ற பிணையில் வெளியே சென்று, திருவள்ளூர், மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு தொடர்ந்து ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த காரணத்தினால் எதிரி சிம்சன் என்பவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய கடந்த 10.08.2024 அன்று நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.மதுரவாயல் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட எதிரி சிம்சன், என்பவரை பெங்களூரில் கைது செய்து, நேற்று முன் தினம் காலை மதுரவாயல் காவல் நிலையம் அழைத்து வந்து விசாரணை செய்தனர்.

# திருவண்ணாமலை அருகே போலீஸ் பாதுகாப்புடன் நிலம் அளவீடு



**திருவண்ணாமலை டிச.24-**

திரு வ ண் ணா மலை அருகே ஐகோர்ட் உத்தரவின் படி போலீஸ் பாதுகாப்புடன் நிலம் அளவீடு செய்யப்பட்டது.

திருவண்ணாமலை அவலூர்பேட்டை சாலையில் வசிப்பவர்கள் கலாமணி, வேலுமணி, ரீட்டா. இவர்களுக்கு சொந்தமான 3.32 ஏக்கர் நிலம் திருவண்ணாமலை திருக்கோயிலூர் ரோடு சோ. கீழ்நாச்சிப்பட்டு கிராமத்தில் உள்ளது. இந்த நிலத்திற்கு பொறிக்கல் கிராமத்தைச் சேர்ந்த அழகிரி ராஜா என்பவர் சொந்தம் கொண்டாடிய தால் இரு தரப்பினருக்கும் பிரச்சனை ஏற்பட்டது. இது சம்பந்தமாக கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கில் சென்னை உயர்நிதிமன்றம், கலாமணி, வேலுமணி, ரீட்டா ஆகியோருக்கு சொந்தமான நிலத்தை அளந்து தரும்படி வருவாய்த் துறைக்கு உத்தரவிட்டது. நிலத்தை அளவீடு செய்ய சர்வேயர் வந்த போது அழகிரி ராஜா தரப்பினர் நிலத்தை அளக்க கூடாது என எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து அந்த நிலம் போலீஸ் பாதுகாப்புடன் வருவாய் ஆய்வாளர் முன்னிலையில் கலாமணி, வேலுமணி, ரீட்டா ஆகியோருக்கு அளந்து தரப்பட்டது.



**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் ஒன்றிய செயலாளர் பாபு ஏற்பாட்டில் பஞ்சலிங்கபுரம் ஊராட்சி சுண்டன்பரப்பு ஊர் சமுதாய நலக்கூடத்திற்கு ஸ்டீல் மேஜையை மேயர் ரெ.மகேஷ் வழங்கினார். உடன் ஊர்தலைவர் பெரியசுவாமி அணி நிர்வாகிகள் தனபால், பிரேமலதா, சரஸ்வதி, நிஷார்,அன்பழகன், கூட்டுறவு வங்கி முன்னாள் செயலாளர் முருகன் வினோத் பலர் கலந்து கொண்டனர்.**

# அரக்கோணம் தனி தொகுதியில் போட்டியிட காங்கிரஸ் சார்பில் இளைஞர் விருப்ப மனு



**அரக்கோணம் டிச 24**

தமிழ்நாடு ராஜீவ் காந்தி பஞ்சாயத்து ராஜ் சங்கதத்தின் முன்னாள் மாநில தலைவரும் மாநில பொதுக்குழு உறுப்பினருமான டாக்டர் சசிகுமார் வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் அரக்கோணம் தனி தொகுதியில் போட்டியிட தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சத்தியமூர்த்தி பவனில் . அமைப்பு செயலாளர் ராமோகன் மாநில பொதுச் செயலாளர் அருள் பெத்தையா ஆகியோரிடம் விருப்ப மனுவை வழங்கினார் அப்போது ராணிப்பேட்டை மாவட்டத்தை சார்ந்த சால்வை மோகன் ராணிப்பேட்டை நகர தலைவர் உத்தமன், ராணிப்பேட்டை கவுன்சிலர் முருகன், ஸ்ரீபெரும்புதூர் ஆர் ஜி பி ஆர் எஸ் ஒருங்கிணைப்பாளர் டில்லிகுமார், ஆர் சி பி ஆர் எஸ் மாநில துணைத்தலைவி ஏவலின்பிரேம் ஆனந்த், வேலூர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆனந்த்வேல், அரக்கோணம் சட்டமன்ற ஒருங்கிணைப்பாளர் சரவணன், அரக்கோணம் ஒன்றிய ஒருங்கிணைப்பாளரும் மாநில பொதுக்குழு உறுப்பினருமான சாந்தகுமார், மற்றும் பிரேம் ஆனந்த், பாலு, அஜய், திவாகர், காளியப்பன் ஆகியோரும் உடன் இருந்தனர்



**கோவில்பட்டி ராம் சரஸ்வதி நகர் மெயின் ரோட்டில் பேவர் பிளாக் சாலையை கடம்பூர் ராஜூ எம்எல்ஏ தொடங்கி வைத்தார். அருகில் முன்னாள் யூனியன் வைஸ் சேர்மன் பழனிச்சாமி, அன்புராஜ், போடு சாமி, நகரச் செயலாளர் விஜய பாண்டியன், மாவட்ட இளைஞர் இளம்பெண்கள் பாசறை செயலாளர் எம்.ஆர்.வி.கவியரசன், மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர் துறையூர் கணேஷ் பாண்டியன், மூப்பன்பட்டி கிளைச் செயலாளர் முருகன், தகவல் தொழில்நுட்ப பிரிவு பொறுப்பாளர் மாரிமுத்து பாண்டியன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.**



**ராணிப்பேட்டைமாவட்டம் ஆற்காட்டில் மகளிர் சுய உதவி குழுக்களின் உள்ளூர் உற்பத்தி பொருட்களை சந்தை படுத்துதல் கண்காட்சி மற்றும் விற்பனையை கலெக்டர் சந்திரகலா குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். இதில் மகளிர் திட்ட இயக்குனர் செந்தில்குமரன், உதவி திட்ட அலுவலர்கள் அருண் குமார், சிவகுமார், வட்டாட்சியர் மகாலட்சுமி கலந்து கொண்டனர்.**



# செல்வ மாதா தேவாலயத்தில் திமுக சார்பில் கிறிஸ்மஸ் நலத்திட்ட உதவிகள்: மாவட்ட திட்ட குழு உறுப்பினர் வழங்கினார்



**கோவில்பட்டி டிச 24**

கோவில்பட்டி செல்வ மாதா தேவாலயத்தில் வைத்து திமுக சார்பில் கிறிஸ்துமஸ் பெருவிழா நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. உபதேசியார் செவஸ்தியான் வரவேற்றார். மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் கே. கே. ஆர். அய்யாதுரை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். அப்போது அவர் பேசும்போது திமுக அரசு கிறிஸ்தவர்கள் மற்றும் சிறுபான்மை மக்களுக்கு அரணாக விளங்கி வருகிறது. தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்கள் கிறிஸ்தவ மக்கள் மீது அதிக பரிவு காட்டி வருகிறார். குறிப்பாக நமது மாவட்ட எம் பி கனிமொழி கருணாநிதி அவர்களும் மாவட்ட அமைச்சர் கீதா ஜீவன் அவர்களும் நம் மாவட்ட கிறிஸ்தவ மக்களுக்கு ஏராளமான நலத்திட்டங்கள் வழங்க அறிவுறுத்திருக்கிறார்கள். அதன்படி இங்கே இரண்டாவது நாளாக வழங்கியுள்ளோம். அனைவருக்கும் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள். இவ்வாறு பேசினார். நிகழ்ச்சியில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




**தென்காசி வீரமாமுனிவர் ஆர்.சி மேல்நிலை பள்ளியில் விலையில்லா மிதிவண்டிகளை தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வே.ஜெயபாலன், சட்டமன்ற உறுப்பினர் பழனிநாடார் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு வழங்கினர். உடன் நகரசெயலாளர் சாதிர் உள்ளார்.**



**திருப்பத்தூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான ஆய்வு கூட்டம் கலெக்டர் சிவ சவுந்தரவல்லி தலைமையில் நடந்தது. இதில் தனி துணை ஆட்சியர் பூஷணகுமார், கோட்டாட்சியர்கள் வரதராஜன், அஜிதாபேகம் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.**

# கொடிக்குறிச்சி ஸ்ரீராம் நல்லமணி யாதவா கல்வியியல் கல்லூரியில் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு பெருவிழா




**தென்காசி டிச.24:**

கொடிக்குறிச்சி ஸ்ரீராம் நல்லமணி யாதவா கல்வியியல் கல்லூரியில் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு தின விழா நடைபெற்றது. கல்வி நிறுவனங்களின் தலைவர் மணிமாறன் தலைமை தாங்கி வாழ்த்துரைவழங்கினார். கல்வியியல் கல்லூரி தமிழ் பேராசிரியை பத்மாவதி மகாராஜன் கிறிஸ்தவ தமிழ் அறிஞர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டு குறித்து பேசினார்.

கல்வியியல் கல்லூரி முதல்வர் அந்தோணிசகாயரூபன் இயேசுகிறிஸ்துவின் வாழ்வில் இருந்துநாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் குறித்து விளக்கினார். கல்வியியல் கல்லூரி ஆங்கில பேராசிரியர் சாமுவேல் பிரின்ஸ் கிறிஸ்து பிறப்பு குறித்து சிறப்புரை யாற்றினார். கல்வியியல் கல்லூரி மாணவமாணவிகள் இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை தத்ரூபமாக நாடகமாக நடித்துக் காட்டினர். மேலும் மாணவ மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. விழாவின் இறுதியில் மாணவ மாணவிகளுக்கு கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டை முன்னிட்டு விதமாக கேக் வழங்கப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை கல்வியியல் கல்லூரி பேராசிரியர்கள் செய்திருந்தனர்.



**வேலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடந்த தொழிற் கடன் முகாமில் 56 பேருக்கு ரூ.7.30லட்சம் மதிப்பிலான் கடன் உதவிகளை கலெக்டர்வே.இரா.சுப்புலட்சுமி வழங்கினார். உடன் தொழில் மைய மேலாளர் ரமணி உள்ளார்.**



**திருமலை குமாரசாமி திருக்கோவிலில் துணை ஆணையர் செயல் அலுவலர் கோமதி தலைமையில் அறங்காவலர்கள் பண்பொழி இசக்கி , பாப்பா தலைமை எழுத்தர் லட்சுமணன், உபயதார்கள் முன்னிலையில் சுத்திகரிக்கப்பட்ட வெந்நீர் மற்றும் குளிர்ந்த நீர் பக்தர்களின் பயன் பாட்டிற்கு திறக்கப்பட்டது. உடன் இளைஞர் அணி நாகராஜன், முருகேசன்,முத்துராஜ், இசக்கி ராஜ், மனோஜ் குமார் மற்றும் திருக்கோவில் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.**

# கல்லூரியில் நடந்த கிறிஸ்துமஸ் விழாவில் நல திட்ட உதவிகள்: டாக்டர் ஐசக் வழங்கினார்




**அரக்கோணம் டிச 24**

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் வட்டம் மஞ்சம்பாடி கிராமத்தில் வி எஸ் ஐசக் கல்வி விண்ணரசு கலையரங்கில் டாக்டர் வி எஸ் ஐசக் கல்வி நிறுவனங்கள், ஜி சி சி ஐ சினாட் மற்றும் அகில இந்திய ஜனநாயக மக்கள் கட்சி ஆகியவை சார்பில் கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்பட்டது இந்த கிறிஸ்மஸ் கொண்டாட்டத்திற்கு ஜி சி சி ஐ செனாட் பிரதமர் பேராயிரும் டாக்டர் வி எஸ் ஐசக் கல்வி நிறுவனங்களின் தலைவருமான டாக்டர் வி எஸ் ஐசக் தலைமை தாங்கினார் சிறப்பாக நடைபெற்ற விழாவில் பள்ளி மாணவர்கள் வண்ண வண்ண ஆடைகளில் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. தொடர்ந்து கிறிஸ்மஸ் கேக் வெட்டி பேராயர்களுக்கும் மாணவர்களுக்கும், கல்லூரி முதல்வர்கள் பேராசிரியர்கள், ஆசிரியர்கள் பணியாளர்கள் என அனைவருக்கும் ஐசக் கிறிஸ்துமஸ் பரிசு பொருட்களுடன் கேக் வழங்கினார்விழாவில் டாக்டர் ஐசக் ஐயா பேசிய போது கல்வி நிறுவனத்தில் 41 உயர் கல்வி பாடப்பிரிவுகள் கொண்டு வரப்பட்டுள்ளன இதன் மூலம் ஒவ்வொருவரும் ஐஏஎஸ், ஐபிஎஸ் ஆகவும் கடற்படை விமானப் படை மருத்துவப் பணிகளில் சிறப்பு இடம் பிடிக்கலாம் மேலும் இங்கு படிப்பதற்கு அரசு நிதி உதவிகளும் பெற்று தரப்படும் இந்தியாவில் எங்கும் இல்லாத வகையில் பல பாட பிரிவுகளையும் இங்கு கொண்டு வருவேன் ஆகவே எல்கேஜி முதல் உயர் கல்வி வரை இங்கே படித்து அனைவரும் வாழ்க்கையில் பிரகாசிக்கலாம் ஆகவே இந்த நல்ல நாளில் அனைவருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்து தெரிவித்து கொள்கிறேன் என்றும் பேசினார்மகளிர் அணி பொது செயலாளர் பிரேமா ஐசக் மற்றும் பேராயர்கள் மாவட்ட தலைவர்கள், செயலாளர்கள் கலந்து கொண்டனர்

# திருச்செந்தூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்



**திருச்செந்தூர், டிச. 24:**

திருச்செந்தூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை நகராட்சி துணைத் தலைவர் செங்குழி ரமேஷ் வழங்கினார்.

தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழா திருச்செந்தூர் செந்தில்முருகன் அரசு பெண்கள் மேல் நி லைப் பள் ளி யில் வைத்து நடந்தது. விழாவுக்கு பள்ளி தலைமையாசிரியர் ரேவதி தலைமை வகித்தார். பள்ளி மேலாண்மைக்குழு தலைவி வீரராஜலெட்சுமி, துணைத்தலைவி கவிதா, உறுப்பினர் முத்துக்கனி, உதவி தலைமை ஆசிரியர்கள் பாலகணேஷ், ஜெகதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். 2025-2026ம் கல்வியாண்டில் 11ம் வகுப்பு பயிலும் 242 மாணவிகளுக்கு திருச்செந்தூர் நகராட்சி துணை தலைவர் செங்குழி ரமேஷ் விலையில்லா சைக்கிள்களை வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட அறங்காவலர் வாள் சுடலை, ஆசிரியர்கள் ஜெபஸ்டின், கலைச்செல்வி, தனலெட்சுமி உள்ளிட்ட ஆசிரியர்கள், திமுக நிர்வாகிகள் கார்த்திகேயன், சுரேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். தமிழாசிரியர் சுவிதா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். முடிவில் ஆசிரியர் விஜிலா கரோலின் நன்றி கூறினார்.

**அரசு ஆண்கள் பள்ளி**

இதே போல திருச்செந்தூர் அருள்மிகு செந்திலாண்டவர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 70 மாணவர்களுக்கு நகராட்சி துணைத் தலைவர் செங்குழி ரமேஷ் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். நிகழ்ச்சியில் பள்ளி தலைமையாசிரியர் சில்வான்ஸ்; சுந்தர் சிங், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் ஆனந்த ராமச்சந்திரன், உதவி தலைமையாசிரியர் பாரதிராஜா, உடற்கல்வி ஆசிரியர் தாமஸ் உள்ளிட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# கொட்டாரம் வெள்ளாளர் சமுதாய சந்தன மாரியம்மன் கோவில் அடிக்கல் நாட்டு விழா



**நாகர்கோவில் டிச. 24-**

தென்குமரி கல்விக்கழக செயலாளர், சமூக சேவகர் பி.டி.செல்வகுமார்கொட்டாரம் வெள்ளாளர் சமுதாய வகை அருள்மிகு சந்தன மாரியம்மன் கோயிலில் தனது சொந்த செலவில் அலங்கார தோரண வாயில் கட்டிக்கொடுக்கிறார். இதற்காக அடிக்கலை நாட்டினார்.

இந்நிகழ்ச்சிக்கு கொட்டாரம் கீழத்தெரு வெள்ளாளர் சமுதாய சங்கத் தலைவர் எம்.செல்வன், செயலாளர் சண்முகானந்தன், பொருளாளர் நடராஜன், துணைத் தலைவர். ராஜேஷ், துணைச் செயலாளர்.கார்த்திக், வழக்கறிஞர் டி. பாலகிருஷ்ணன், சிவராஜன், ரகுபதி மற்றும் நிர்வாக குழு பொதுக்குழு உறுப்பினர்கள் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No.18/19 R.N.R. Arcade, Katpadi Road Vellore-4
Ph: 0416-4203997
E-Mail: velloredi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2003/15101
Editor: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# பிரதமருடன் நீரஜ் சோப்ரா சந்திப்பு



**புதுடெல்லி, டிச. 24-**

டெல்லியில், பிரதமர் நரேந்திர மோடியை, தடகள வீரர் நீரஜ் சோப்ரா மற்றும் அவரது மனைவி ஹிமானி மோர் ஆகியோர் நேரில் சந்தித்து உரையாடினார்.

**முக்கிய விவகாரங்கள்...**

டெல்லியில் உள்ள பிரதமர் மோடியின் இல்லமான லோக் கல்யாண் மார்க்கில், இரண்டு முறை ஒலிம்பிக் பதக்கங்களை வென்ற தடகள ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ரா மற்றும் அவரது மனைவி ஹிமானி மோர் ஆகியோர் அவரை நேற்று (டிச. 23) நேரில் சந்தித்து உரையாடினார். இந்தச் சந்திப்பில், நாட்டின் விளையாட்டுத் துறை குறித்த முக்கிய விவகாரங்களைப் பற்றி இருவரும் உரையாடியதாக, பிரதமர் மோடி அவரது எக்ஸ் தளப் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

**கவுரவப்பதவி...**

முன்னதாக, நீரஜ் சோப்ராவுக்கு இந்திய ராணுவத்தில் லெப்டினன்ட் கர்னல் என்ற கௌரவப் பதவி வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் இந்திய ராணுவத்தில் பணியாற்றி வரும் அவருக்கு, இந்த கௌரவப் பதவியை மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் வழங்கியது குறிப்பிடத்தக்கது.

# எட்டு மாவட்டங்களுக்கு புதிய த.வெ.க. நிர்வாகிகளை நியமனம் செய்தார் விஜய்

**சென்னை, டிச. 24-**



த.வெ.க.வில் மாவட்ட நிர்வாகிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளது. அதற்கு கட்சி நிர்வாகிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் விஜய் தெரிவித்தார்.

மாவட்ட நிர்வாகிகள் நியமனம் தொடர்பாக த.வெ.க. தலைவர் விஜய் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;-

தமிழக வெற்றிக் கழகத்தின் கழகப் பணிகளை மேற்கொள்ள, கழக அமைப்பானது சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கி, 120 மாவட்டங்களாக ஏற்கெனவே பிரிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் நிர்வாக வசதிகளுக்காகக் கழக மாவட்டங்களின் எண்ணிக்கை கூடுதலாக்கப்பட்டுள்ளன. அதன்படி ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட மாவட்டங்களோடு, மேலும் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, தற்போது 8 மாவட்டங்களுக்கு, கழக விதிகளின்படி மாவட்டக் கழக நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதியதாகப் பொறுப்பேற்கும் நிர்வாகிகளுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். புதிய நிர்வாகிகளுக்குக் கழகத் தோழர்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார். இதற்கிடையே, மாநில பொறுப்பு கேட்டு தூத்துக்குடி பெண் நிர்வாகி அஜிதா, தனது ஆதரவாளர்களுடன் விஜய்யின் த.வெ.க. அலுவலகத்தின் முன்பு தற்போது தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.



முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை, பெரம்பூர், தொன்போஸ்கோ பள்ளி வளாகத்தில், கழக சிறுபான்மை நல உரிமை பிரிவு சார்பில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் பெருவிழாவில், கிறிஸ்துமஸ் கேக் வெட்டி, கிறிஸ்துவ, இஸ்லாமிய, இந்து உள்ளிட்ட பல்வேறு சமயத்தைச் சார்ந்தவர்களுக்கு வழங்கினார்.

## முதல் முறையாக
# ஐ.சி.சி. தரவரிசையில் தீப்தி சர்மா முதலிடம்

**துபாய், டிச. 24-**

ஐ.சி.சி.யின் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் இந்திய வீராங்கனை தீப்தி சர்மா முதல் முறையாக முதலிடம் பிடித்துள்ளார்.



**அன்னாபெல்லை...**

இந்திய அணியின் நட்சத்திர ஆல்ரவுண்டரான தீப்தி சர்மா இலங்கைக்கு எதிரான முதல் டி20 போட்டியில் அபார பந்துவீச்சை வெளிப்படுத்தினார். 4 ஓவர்களை வீசிய அவர் வெறும் 20 ரன்கள் மட்டுமே விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட்டினைக் கைப்பற்றினார். இலங்கைக்கு எதிரான முதல் டி20 போட்டியில் சிறப்பாக செயல்பட்டதன் மூலம், ஐ.சி.சி.யின் டி20 போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் ஆஸ்திரேலிய வேகப் பந்துவீச்சாளர் அன்னாபெல் சதர்லேண்டை பின்னுக்குத் தள்ளி தீப்தி சர்மா முதல் முறையாக முதலிடம் பிடித்துள்ளார்.

**அருந்ததி ரெட்டி...**

737 ரேட்டிங் புள்ளிகளுடன் தீப்தி சர்மா தரவரிசையில் முதலிடத்தில் இருக்க, அன்னாபெல் சதர்லேண்ட் 736 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார். பாகிஸ்தான் வீராங்கனை சதியா இக்பால், இங்கிலாந்து வீராங்கனைகளான சோஃபி எக்கல்ஸ்டோன் மற்றும் லாரன் பெல் மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களில் முறையே உள்ளனர். இந்திய அணியின் வேகப் பந்துவீச்சாளர் அருந்ததி ரெட்டி 5 இடங்கள் முன்னேறி 36-வது இடம் பிடித்துள்ளார். மற்றொரு இந்திய வீராங்கனையான ஸ்ரீ சரணி 19 இடங்கள் முன்னேறி 69-வது இடம் பிடித்துள்ளார்.

# பொங்கல் பரிசு எப்போது..? அமைச்சர் ரகுபதி விளக்கம்

**புதுக்கோட்டை, டிச. 24-**


பொங்கல் பரிசு எப்போது வழங்கப்படும் என்று அமைச்சர் ரகுபதி விளக்கமளித்துள்ளார்.

புதுக்கோட்டையில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அமைச்சர் ரகுபதி கூறியதாவது,

ஒத்தக்கருத்துடைய கட்சிகள் ஓரணியில் இணைய வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி கூறுகிறார். ஆனால் டி.டி.வி. தினகரனையோ, ஓ.பி.எஸ்.சையோ சேர்த்துக்கொள்கிறேன் என்று சொல்லி இருக்கிறாரா? இதிலிருந்து அவர்களுக்குள் ஒத்த கருத்து இல்லை என்பது தெரிகிறது. பியூஸ்கோயல் அனைவரையும் ஒன்று சேர்ப்பதற்காக வருகிறார். அவருக்கு தமிழ் நாட்டின் அரசியல் தட்பவெட்ப நிலை தெரியாது. அதனால் நிச்சயமாக அவர் நினைப்பது தமிழ்நாட்டில் நடக்காது.

எடப்பாடி பழனிசாமி அவரது ஆட்சி காலத்தில் பொங்கல் பண்டிகையின் போது ரூ.5 ஆயிரம் கொடுத்து இருக்கலாம், கொடுக்காமல் இருந்திருக்கலாம். நாங்கள் தற்பொழுது இதைப் பற்றி சொல்ல மாட்டோம். என்ன என்பது ரகசியமாகத்தான் இருக்கும். திடீரென்று தான் அறிவிக்கப்படும். என தெரிவித்தார்.

## முதலிடம் பிடித்தார் லாரா



மகளிர் உலக கோப்பை இறுதிப் போட்டியில் இந்தியாவிடம் தோல்வியடைந்து தென்ஆப்பிரிக்கா சாம்பியன் பட்டத்தை தவறவிட்டது. ஆனால் அந்த அணியின் கேப்டனும், தொடக்க பேட்டருமான லாரா வால்வார்த் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அரையிறுதியில் இங்கிலாந்துக்கு எதிராகவும், இறுதிப் போட்டியில் இந்தியாவுக்கு எதிராகவும் சதம் அடித்தார். ஒட்டுமொத்தமாக இந்த தொடரில் 9 இன்னிங்சில் 571 ரன்கள் குவித்தார். இதன்மூலம் மகளிருக்கான ஐசிசி ஒருநாள் பேட்டர்கள் தரவரிசையில் முதல் இடத்தில் முன்னேறினார்.

ஏற்கனவே முதல் இடம் பிடித்திருந்த ஸ்மிரிதி மந்தனா 2ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டார். இதனையடுத்து மீண்டும் ஸ்மிரிதி மந்தனா முதலிடம் பிடித்தார். லாரா வால்வார்த் 2 ஆம் இடத்துக்கு தள்ளப்பட்டார். இந்நிலையில், அயர்லாந்து அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 3 -0 என்ற கணக்கில் தென் ஆப்பிரிக்கா கைப்பற்றியது. இந்த தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய லாரா வால்வார்த் தொடர் நாயகி விருதை வென்றார். இதன்மூலம் மகளிருக்கான ஐசிசி ஒருநாள் பேட்டர்கள் தரவரிசையில் லாரா வால்வார்த் மீண்டும் முதல் இடத்துக்கு முன்னேறினார். ஏற்கனவே முதல் இடம் பிடித்திருந்த ஸ்மிரிதி மந்தனா 2ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டார்.

## வீராங்கனைகளுக்கு ஜாக்பாட்

இந்தியாவில், உள்நாட்டு கிரிக்கெட்டில் விளையாடும் வீராங்கனைகள் மற்றும் போட்டி நடுவர்களுக்கான கட்டணம் இரண்டு மடங்காக உயர்த்தப்படுகிறது. இந்த உயர்வுக்கு இந்திய கிரிக்கெட் வாரியத்தின் உயர்மட்ட குழு ஒப்புதல் அளித்துள்ளது. உள்ளூர் ஒரு நாள் கிரிக்கெட் தொடர் மற்றும் பல நாள் போட்டித் தொடரில் விளையாடும் சீனியர் வீராங்கனைகளுக்கு போட்டி கட்டணமாக நாள் ஒன்றுக்கு ரூ.20 ஆயிரம் வழங்கப்பட்டு வந்தது. திருத்தப்பட்ட கட்டணத்தின்படி இனி அவர்கள் நாள் ஒன்றுக்கு ரூ.50 ஆயிரம் பெறுவார்கள். அணிக்கு தேர்வாகி களம் காணாமல் வெளியே இருக்கும் வீராங்கனைகளின் கட்டணம் ரூ.10 ஆயிரத்தில் இருந்து ரூ.25 ஆயிரமாக அதிகரிக்கப்படுகிறது.

இதே போல் உள்ளூர் 20 ஓவர் போட்டிகளில் களம் காணும் சீனியர் வீராங்கனைகளுக்கு ஒரு போட்டிக்கு ரூ.25 ஆயிரமும், மாற்று வீராங்கனைகளுக்கு ரூ.12,500-ம் அளிக்கப்படுகிறது. ஜூனியர் வீராங்கனைளுக்கும் ஜாக்பாட் அடிக்கிறது. அவர்களுக்கு ஒரு நாள் கிரிக்கெட்டுக்கு ரூ.25 ஆயிரமும், 20 ஓவர் போட்டிக்கு ரூ.12,500-ம் வழங்கப்பட உள்ளது. நடுவர்களுக்கு லீக் ஆட்டங்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.40 ஆயிரமும், அதுவே முக்கியமான நாக்-அவுட் சுற்று ஆட்டம் என்றால் ரூ.50 ஆயிரம் முதல் ரூ.60 ஆயிரமும் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

## இப்போது நிறைவேற்றும் புதிய திட்டத்தில்
# பா.ஜ.க. அரசு 125 நாட்கள் வேலை தரப்போகிறதா..?
## முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி

**சென்னை, டிச. 24-**

பா.ஜ.க. அரசு இப்போது 1008 நிபந்தனைகளுடன் நிறைவேற்றும் புதிய திட்டத்தில் 125 நாட்கள் வேலை தரப்போகிறதா? என்று கேள்வி எழுப்பிய முதல்வர் மு.க.ஸ்டாலின், 100 நாட்கள் வேலை திட்டத்தை நிறைவேற்றாமல், சம்பளமும் வழங்காமல் பா.ஜ.க. அரசு அலைக்கழித்ததாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைதிட்டத்துக்கு பதிலாக புதிய திட்டத்தை மத்திய அரசு கொண்டுவந்துள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், எதிர்க்கட்சித்தலைவர் எடப்பாடி பழனிசாமியை கண்டித்தும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது; விபி ஜி ராம்-ஜி திட்டத்தால் 125 நாட்கள் வேலை கிடைக்கப் போகிறதா? அதைப் பாராட்ட எங்களுக்கு மனமில்லையா?

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைதிட்டம் முடக்கப்பட்டுள்ளதை எதிர்த்துக் குரல் கொடுக்கத் துணிவின்றி, மீண்டும் மீண்டும் பச்சைப் பொய்யை அவிழ்த்து விடுகிறார் பழனிசாமி. ஆண்டுக்கு 100 நாட்கள் வேலை என்பது சட்டமாக இருந்த போதே அதை நிறைவேற்றாமல், சம்பளமும் வழங்காமல் அலைக்கழித்த பா.ஜ.க. அரசு இப்போது 1008 நிபந்தனைகளுடன் நிறைவேற்றும் புதிய திட்டத்தில் 125 நாட்கள் வேலை தரப்போகிறதா ?

உண்மையைச் சொன்னால், ஒருநாள் வேலைக்குக் கூட இனி மத்திய அரசு உத்தரவாதம் கொடுக்காமல் கடமையைக் கைகழுவியுள்ளது. மகாத்மா காந்தி பெயரை நீக்கக்கூடாது என்று உங்கள் ஓனருக்கு வலிக்காமல் அழுத்தம் கொடுத்தீர்களே... என்ன ஆனது? உங்களை ஒரு பொருட்டாகவே டெல்லி மதிக்கவில்லையே. மாநில அரசின் மீது 40 சதவீத நிதிச் சுமையை ஏற்றும் எதேச்சாதிகாரமும் கைவிடப்படவில்லையே?

டெல்லியை எதிர்த்துக் கேள்வி கேட்கும் துணிவு உங்களுக்கு இருக்குமென்று யாரும் எதிர்பார்க்கவில்லை. ஆனால், முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கும் முட்டுகளையாவது தவிர்க்கலாம். வறுமையை ஒழித்து, மக்களின் மாண்பை உயர்த்திய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் பா.ஜ.க. அரசால் குழிதோண்டி புதைக்கப்படுவதற்கு வக்காலத்து வாங்கி, உங்களது அரசியல் வாழ்க்கையின் முடிவுரையை நீங்களே எழுதிக் கொள்கிறீர்கள் என்பதை மட்டும் நினைவூட்டுகிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆஷஸ் தொடரின் 4-வது டெஸ்ட்:
# ஆஸ்திரேலிய அணி அறிவிப்பு

**மெல்போர்ன், டிச. 24-**

இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடரின் கடைசி 2 டெஸ்ட் போட்டிக்கான 15 பேர் கொண்ட ஆஸ்திரேலியா அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**வரும் 26-ம் தேதி...**

ஆஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான ஆஷஸ் தொடர் ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது. இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 3-0 என்ற கணக்கில் ஆஸ்திரேலியா தொடரை கைப்பற்றி விட்டது. இதனை தொடர்ந்து இரு அணிகளுக்கு இடையேயான 4-வது டெஸ்ட் போட்டி வரும் 26-ம் தேதி நடைபெற உள்ளது.

**15 பேர் அணி...**

இந்நிலையில் இங்கிலாந்துக்கு எதிரான கடைசி 2 டெஸ்ட் போட்டிக்கான 15 பேர் கொண்ட ஆஸ்திரேலியா அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 3-வது டெஸ்ட் போட்டியில் விளையாடிய கேப்டன் கம்மின்ஸ், நாதன் லயன் ஆகியோர் காயம் காரணமாக கடைசி 2 டெஸ்ட் போட்டியில் இருந்து விலகி உள்ளனர். மேலும் ஹெசில்வுட் ஏற்கனவே காயத்தில் இருப்பதால் அவரும் இடம் பெறவில்லை.

**ஆஸ்திரேலியா அணி:**

ஸ்டீவ் ஸ்மித் (கேப்டன்), ஸ்காட் போலண்ட், அலெக்ஸ் கேரி, பிரெண்டன் டாகெட், கேமரூன் கிரீன், டிராவிஸ் ஹெட், ஜோஷ் இங்கிலிஸ், உஸ்மான் கவாஜா, மார்னஸ் லெபுசென், டாட் மர்பி, மைக்கேல் நெசர், ஜெய் ரிச்சர்ட்சன், மிட்செல் ஸ்டார்க், ஜேக் வெதரால்ட், பியூ வெப்ஸ்டர்.

## சட்டசபை தேர்தல் தொகுதி பங்கீடு:
# பியூஷ் கோயலிடம் பட்டியலை கொடுத்த எடப்பாடி பழனிசாமி
## பொங்கல் பண்டிகை முடிந்ததும் அறிவிப்பு வெளியாகிறது

**சென்னை, டிச. 24-**

தொகுதி பங்கீடு குறித்து பியூஷ் கோயலிடம் பட்டியல் கொடுத்த எடப்பாடி பழனிசாமி பொங்கல் முடிந்ததும் தொகுதி பங்கீடு அறிவிக்கப்படும்.

தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சூழலில், கட்சிகள் அதற்கு தயாராகும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. இதனை முன்னிட்டு, தமிழக பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள மத்திய மந்திரி பியூஸ் கோயல் நேற்று சென்னை வந்தார். அவர் தியாகராயகரில் உள்ள பா.ஜ.க. அலுவலகத்தில் அக்கட்சி நிர்வாகிகளுடன் சட்டசபை தேர்தல் பணி, கள நிலவரம், வெற்றி வாய்ப்பு உள்ளிட்டவை குறித்து ஆலோசனை நடத்தினார்.

இந்நிலையில், சென்னை லீலா பேலசில் பியூஷ் கோயலை, அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று நேரில் சந்தித்து பேசினார். அவர்கள் இருவரும் ஒன்றரை மணிநேரத்திற்கும் மேலாக தொகுதி பங்கீடு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினர். இந்த சந்திப்பின் போது பா.ஜ.க. சார்பில், தமிழக பா.ஜ.க. இணை பொறுப்பாளர் அர்ஜுன் ராம் மேக்வால், மத்திய இணை மந்திரி எல். முருகன் உள்ளிட்டோரும் இடம் பெற்றிருந்தனர்.

இதுபற்றி எடப்பாடி பழனிசாமி நிருபர்களிடம் கூறும்போது, 2026 சட்டசபை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள கட்சிகள் ஒருங்கிணைந்து எப்படி செயல்படுவது? என்பது குறித்து ஆலோசித்தோம் என்றார். இந்த சந்திப்பின் போது, தொகுதி பங்கீடு தொடர்பாக பியூஷ் கோயலிடம் எடப்பாடி பழனிசாமி பட்டியல் ஒன்றை கொடுத்துள்ளார். அந்த பட்டியலில், அ.தி.மு.க. 170, பா.ஜ.க. 23, பா.ம.க. 23, மற்றவை 18 (தே.மு.தி.க.-6, அ.ம.மு.க.-6, த.மா.கா.-3, ஓ.பி.எஸ்.-3) தொகுதிகளில் போட்டியிடும் என்பதற்கான விவரங்கள் உள்ளன என கூறப்படுகிறது.

கூட்டணி தொடர்பாக பா.ம.க., தே.மு.தி.க.விடம் நாங்களே பேச்சுவார்த்தை நடத்தி கொள்கிறோம் என அ.தி.மு.க. தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. ஓ. பன்னீர் செல்வம் மற்றும் தினகரன் ஆகியோருடன் பா.ஜ.க.வே பேச்சுவார்த்தை நடத்தி கொள்ளட்டும் என கூறியுள்ளனர். பொங்கல் பண்டிகை முடிந்ததும் தொகுதி பங்கீடு விவரங்கள் வெளியிடப்படும் என தகவல் தெரிவிக்கின்றது.

# விஜய் ஹசாரே தொடரில் விளையாடும் கோலி ரசிகர்களுக்கு அனுமதி மறுப்பு

**பெங்களூரு, டிச. 24-**

விஜய் ஹசாரே தொடரில் விளையாடும் கோலி ரசிகர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. ரசிகர்கள் அதிகளவில் கூடுவதை தடுக்க இப்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

**38 அணிகள்...**

இந்திய உள்ளூர் ஒருநாள் (50 ஓவர்) கிரிக்கெட் தொடரான விஜய் ஹசாரே கோப்பையின் 33-வது சீசன் இன்று முதல் ஜனவரி 18-ம் தேதி வரை இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடக்கிறது. இந்த போட்டியில் மொத்தம் 38 அணிகள் பங்கேற்கின்றன. இந்திய கிரிக்கெட் அணிக்காக விளையாடும் வீரர்கள் அனைவரும் உள்ளூர் போட்டிகளில் விளையாட வேண்டும் என்று பி.சி.சி.ஐ. அறிவுறுத்தி உள்ளது. இதனால் இந்த தொடரில் விராட், ரோகித், பண்ட் உள்ளிட்ட பல முன்னணி வீரர்கள் விளையாட உள்ளனர்.

**ஜெய்ப்பூரில்...**

இந்த தொடரில் ரோகித் சர்மா மற்றும் விராட் கோலி 2 அல்லது 3 போட்டிகளில் மட்டுமே விளையாடுகின்றனர். இதனால் அவர்கள் விளையாடுவதை பார்க்க ரசிகர்கள் ஆவலுடன் உள்ளனர். இதனால் அவர்கள் விளையாடும் போட்டிகளில் அதிக அளவில் ரசிகர்கள் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த தொடரின் ஒரு லீக் போட்டியில் மும்பை - சிக்கீம் அணிகள் இன்று மோதுகிறது. இந்த போட்டி ஜெய்ப்பூரில் நடைபெற உள்ளது.

**அனுமதி இலவசம்....**

இந்நிலையில் ரோகித் சர்மா மும்பை அணியில் இடம்பெற்றுள்ளதால் ரசிகர்களுக்கு அனுமதி இலவசம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் ரோகித் ரசிகர்கள் மிகுந்த ஆவலுடன் உள்ளனர். அதேசமயம் பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் நடைபெறும் விஜய் ஹசாரே போட்டியில் விராட் கோலி பங்கேற்கிறார். விராட் கோலியை காண ரசிகர்கள் அதிகளவில் கூடுவதை தடுக்க, மைதானத்திற்குள் ரசிகர்களை அனுமதிக்க கூடாது என கர்நாடக அரசு அம்மாநில கிரிக்கெட் வாரியத்திற்கு உத்தரவிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இது கோலி ரசிகர்களிடையே சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# ஜெமிமா ரோட்ரிக்ஸ் கேப்டன்?

5 அணிகள் பங்கேற்கும் மகளிர் பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டி ஜனவரி 9-ந் தேதி முதல் பிப்ரவரி 5-ந் தேதி வரை நவி மும்பை, வதோராவில் நடைபெறுகிறது. இதற்கான ஏலம் சமீபத்தில் நடைபெற்றது. இந்த நிலையில் டெல்லி கேபிடல்ஸ் அணியின் கேப்டனாக ஜெமிமா ரோட்ரிக்ஸ் நியமிக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அந்த அணி நிர்வாகம் வெளியிட்டுள்ள வீடியோவில் இன்று மாலை 6 மணிக்கு மிகப்பெரிய அறிவிப்பு வெளியாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.25 வயதாகும் ஜெமிமா ரோட்ரிக்ஸ் இந்திய அணியையோ அல்லது டெல்லி கேபிடல்ஸ் அணியையோ கேப்டனாக வழிநடத்திய அனுபவம் கிடையாது. மெக்லேனிங் டெல்லி அணியில் இருந்து உபி. வாரியர்சில் இணைந்ததால், புதிய கேப்டனாக ஜெமிமா ரோட்ரிக்ஸ் நியமிக்கப்பட அதிக வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. தென் ஆப்பிரிக்க கேப்டன் லாரா வோல்வர்ட் டெல்லி கேபிடல்ஸ் அணியில் இணைந்துள்ளார். உலக கோப்பையில் இறுதிப் போட்டி வரை முன்னேற காரணமாக இருந்த அவர் டெல்லி அணியின் கேப்டன் வாய்ப்பில் இருப்பதாகவும் கூறப்படுகிறது. ஆனால் டெல்லி கேபிடல்ஸ் நிர்வாகம் இந்திய வீராங்கனை ஒருவரையே புதிய கேப்டனாக நியமிக்க ஆர்வம் காட்டி வருகிறது.

# அரையாண்டு விடுமுறை நாட்களில் சிறப்பு வகுப்புகளை நடத்தக்கூடாது
## தமிழ்நாடு அரசு கடும் எச்சரிக்கை

**சென்னை, டிச. 24-**

அரையாண்டு விடுமுறை நாட்களில் சிறப்பு வகுப்புகளை நடத்தக்கூடாது என்று தமிழ்நாடு அரசு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பள்ளிகளுக்கு 24-ம் தேதி முதல் அரையாண்டு விடுமுறை தொடங்குகிறது. இதையடுத்து கிறிஸ்துமஸ், ஆங்கிலப் புத்தாண்டு ஆகிய கொண்டாட்டங்களை தொடர்ந்து ஜனவரி 5ஆம் தேதி மீண்டும் பள்ளிகள் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி திருச்சியில் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது., அரையாண்டு விடுமுறை நாட்களில் சிறப்பு வகுப்புகளை நடத்தக்கூடாது. விடுமுறை என்பது மாணவர்களின் புத்துணர்ச்சிக்காக அளிக்கப்படுகிறது. எனவே அவர்களுக்கு மன அழுத்தம் ஏற்படுத்தி விடக்கூடாது. குறிப்பாக தனியார் பள்ளிகள் அதை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும்.

தமிழகத்தில் உள்ள அரசு பள்ளிகளில் 9,416 புதிய வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. அடுத்தகட்டமாக 7,898 வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. பாழடைந்த கட்டடங்களை இடிக்க வேண்டும் என்று தொடர்ந்து அறிவுறுத்தி வருகிறோம். புதிய கட்டடம் கட்டப்படுவதால் சமுதாய கூடங்களில் அல்லது வாடகை கட்டிடங்களில் மாணவர்கள் அமர வைக்கப்பட்டு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தினோம். ஆனால் அவர்கள் போராட்டம் நடத்துவதில் உறுதியாக இருக்கின்றனர். ஜனவரி 6-ம் தேதிக்குள் அரசு ஊழியர்களுக்கு நல்ல செய்தியை நிச்சயமாக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவிப்பார். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**



திண்டுக்கல் மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணியில் புதிதாக நியமனம் செய்யப்பட்ட ஒன்றிய, நகரம், பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள் அமைச்சர் சக்கரபாணியை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். இந்நிகழ்வின் போது மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் தினேஷ்குமார், துணை ஒருங்கிணைப்பாளர்கள் வினித்குமார், ஜாபர்அலி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## தியாகசீலர் கக்கனின் 44-வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அ.ம.மு.க சார்பில் மாவட்ட கழக செயலாளர் டேவிட் அண்ணாதுரை அஞ்சலி



மேலூர், டிச.24-

தியாக சீலர் கக்கனின் 44 ம் ஆண்டு நினைவு தினத்தை யொட்டி தும்பைபட்டியில் உள்ள அவரது மணிமண்டபத்தில் கக்கனின் திருவுருவ சிலைக்கு அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் மதுரை புறநகர் மாவட்ட கழகத்தின் சார்பில் மாநில அம்மா பேரவை செயலாளரும், மதுரை புறநகர் மாவட்ட கழக செயலாளர் கா.டேவிட் அண்ணாதுரை, கழக அமைப்புச் செயலாளர் செ.சரவணன், மேலூர் ஆசையன் சாமி ஆகியோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். நிகழ்ச்சியில் மேலூர் தொகுதி பொறுப்பாளர் சோமாசி, கொட்டாம்பட்டி ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஜெயபால், தர்மலிங்கம், செழியன், அருணாச்சலம், மேலூர் ஒன்றிய கழகச் செயலாளர் சந்திரசேகர், மாநில விவசாய பிரிவு தலைவர் அருவுகராஜா, மாவட்ட அம்மா பேரவை செயலாளர் வாசுதேவன், மாவட்ட இளைஞர் பாசறை செயலாளர் பிரசாத், தலைமை கழக பேச்சாளர் ராஜேந்திரன், மாவட்ட எம்ஜி.ஆர் மன்ற துணைச் செயலாளர் ராக என்ற ராஜேந்திரன் மற்றும் அமமுக நிர்வாகிகள், தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## முதல்வர் ஸ்டாலினின் சரித்திர சாதனை திட்டங்களால் 2026 சட்டப்பேரவை தேர்தலில் தி.மு.க வெற்றி நிச்சயம்

### மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் பேச்சு



திருமங்கலம்,டிச.24-

தமிழக முன்னாள் முதலமைச்சர் கலைஞரின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஏற்பாட்டின் பேரில் திருமங்கலம் தொகுதியில் வசித்திடும் 1.50 லட்சம் குடும்ப அட்டை தாரர்களுக்கு நலத்திட்ட உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.இதன் ஒரு பகுதியாக திருமங்கலம் கிழக்கு ஒன்றியம் விருசங்குளம், எட்டுநாழி புதூர், கிரிய கவுண்டன் பட்டி, நடுக்கோட்டை கிராம மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் விழா நேற்று மாலை சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு திருமங்கலம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் தங்கப்பாண்டி தலைமை வகித்தார். மாவட்ட மகளிரணி அமைப்பாளர் கிருத்திகா தங்கப்பாண்டி முன்னிலை வகித்தார்.ஏராளமான கிராம மக்கள் கலந்து கொண்ட இவ்விழாவில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் சிறப்பாளராக கலந்து கொண்டு மேற்கண்ட கிராமங்களில் வசித்திடும் மக்கள் 2500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:கடந்த சட்டமன்ற தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி இந்தியாவிலுள்ள முதல்வர்களின் முதல்வராக மு.க.ஸ்டாலின் திகழ்கிறார்.100 நாள் வேலை திட்டத்தை முடக்க மத்திய அரசு செய்திடும் அனைத்து முயற்சிகளையும் முதலமைச்சர் நிச்சயமாக முறியடித்திடுவார்.100 நாள் திட்டம்

முழுமையாக நடைபெற்றிட நீங்கள் திமுகவை ஆதரித்திட வேண்டும்.100 நாள் திட்டத்தை பெயர் மாற்றி முடக்கிடும் சதியை எதிர்த்து திமுக சார்பில் போராட்டம் (இன்று) நடைபெறவுள்ளது. மக்களின் வாழ்வாதாரத்திற்கு வேட்டு வைத்திடும் வகையில் மத்திய அரசு செயல்படுகிறது. முதல்வரின் சரித்திர சாதனை திட்டங்களால் 2026 சட்டமன்ற தேர்தலில் திமுக அமோக வெற்றி பெற்றிடும் என்று பேசினார்.

இதையடுத்து விழாவில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான மக்களுக்கு சிக்கன் பிரியாணியுடன் அசைவ விருந்து மற்றும் கிராமப்புற கிரிக்கெட் குழுக்களுக்கு கிரிக்கெட் பேட் மற்றும் விளையாட்டு உபகரணங்களை மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் வழங்கினார்.

இவ்விழாவில் ஒன்றிய செயலாளர் மதன்குமார்,முத்துராமன்,மாவட்ட அணி அமைப்பாளர் சிவனேசன் கட்சி நிர்வாகிகள் தனுஷ்கோடி, காளிதாஸ், வக்கீல் கவிஸ்ரீ தினேஷ், அழகுமலை,முன்னாள் நகர்மன்ற தலைவர் நிரஞ்சன், ஏர்போர்ட் ராமன், வடக்கம்பட்டி ராதாகிருஷ்ணன், மேலக்கோட்டை பாரதி, ரஞ்சித் குமார் மற்றும் திருமங்கலம் கிழக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## பரமக்குடியில் அ.தி.மு.க. சார்பில் கண் பரிசோதனை முகாம்



பரமக்குடி,டிச.24-

பரமக்குடியில் அதிமுக மாவட்ட அம்மா பேரவை சார்பில் இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட 32 வது வார்டில் அதிமுக மாவட்ட அம்மா பேரவை செயலாளர் வடமலையான் எம்.சி. ஏற்பாட்டில் சங்கரா கண் மருத்துவமனையுடன் இணைந்து இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. இம்முகாமில் ஆட்டோ ஓட்டுநர்கள்,வியாபாரிகள், தொழிலாளர்கள்,பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு கண் பரிசோதனை செய்து கொண்டனர்.இதில் 40க்கும் மேற்பட்டோர் இலவச அறுவை சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

பரிசோதனை செய்து கொண்டவர்களுக்கு இலவச மருந்து,மாத்திரைகள் வழங்கப்பட்டது. மேலும் போது மருந்துவ பரிசோதனையும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டது.முகாமில் நகர் அம்மா பேரவை திருமுருகன் உட்பட 32 வது வார்டு பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## பி.ஏ.சி. ராமசாமி ராஜா தொழில் நுட்பக்கல்லூரியில் போதை எதிர்ப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம்



ராஜபாளையம், டிச.24-

ராஜபாளையம் பி .ஏ.சி. ராமசாமி ராஜா தொழில் நுட்பக் கல்லூரியில் போதை எதிர்ப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் கல்லூரி ஆட்சி மன்ற குழு உறுப்பினர் திரு என் .கே. ஸ்ரீ கண்டன் ராஜா தலைமையில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் (பொறுப்பு) டாக்டர் ஆர் . கார்த்திகேயன் வரவேற்புரையாற்றினார். . ராஜபாளையம் சரக காவல் துணை கண்காணிப்பாளர் பி. ஃபரினா பீவி அவர்கள் கலந்து கொண்டு போதை பொருள்களால் ஏற்படும் தீமைகள் குறித்து மாணவ மாணவியர்களுக்கு விழிப்புணர்வு கருத்துக்களை வழங்கினார்கள். தெற்கு காவல் நிலைய ஆய்வாளர் ராஜேஷ் அவர்களும் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார். கருத்தரங்க நிகழ்ச்சியில் ராம்கோ கல்வி குழுமங்களின் முதன்மை செயல் அதிகாரி கிரிதரன், டிரஸ்ட் பொது மேலாளர் கூடலிங்கம், ராம்கோ குழும கல்வி நிலையங்களின் தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதல்வர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் . இதன் மூலம் கல்லூரியில் பயிலும் 1300 மாணவ மாணவியர்கள் பயன் பெற்றனர். நிகழ்ச்சி முடிவில் டாக்டர் ஆர் . கார்த்திகேயன், விரிவுரையாளர் /ஆங்கிலம் . நன்றி கூறினார். விழாவிற்கான ஏற்பாடுகளை கல்லூரி முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் சிறப்பாக செய்து இருந்தனர்.

## நத்தத்தில் பழுதடைந்த அரசு டவுன் பேருந்துகளை மாற்ற கோரிக்கை

நத்தம், டிச.24-

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பஸ் நிலையத்தில் இருந்து பல்வேறு மாவட்ட பகுதிகளுக்கும்,கிராம பகுதிகளுக்கும் அரசு பஸ்கள் இயக்கப்பட்டு வருகிறது.இந்நிலையில் அழகர்கோவில், அலங்காநல்லூர் மற்றும் சமுத்திராபட்டி வழியாக கோட்டையூருக்கும் டவுன் பஸ்கள் இயக்கப்படுகிறது. இந்த அரசு டவுன் பஸ்கள் மிகவும் பழுதடைந்து ஓட்டை உடைசலாகவும் உள்ளது. மேலும் அடிக்கடி நடுவழியில் பழுதாகி நிற்கும் சூழ்நிலையே ஏற்படுகிறது. இதனால் டிரைவர்கள் மிகவும் சிரமப்பட்டு பஸ்களை இயக்கும் நிலை ஏற்படுகிறது. எனவே அழகர்கோவில், அலங்காநல்லூர் மற்றும் சமுத்திராபட்டி வழியாக கோட்டையூர் செல்லும் அரசு பழுதடைந்த டவுன்பஸ்களையும், மேலும் பல்வேறு கிராம பகுதிகளுக்கு செல்லும் பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகள் விட மாவட்ட போக்குவரத்து நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கையும் எழுந்துள்ளது.

## தங்கச்சிமடத்தில் அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த வணிகர் சங்க நிர்வாகிகள் கோரிக்கை



ராமேசுவரம்,டிச.24-

தங்கச்சிமடம் பகுதியில் அமைந்துள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இன்று நடைபெற்ற பணியில் சங்க கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது

ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடம் ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில் தங்கச்சிமடம் வணிகர்கள் சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது.இந்த கூட்டத்திற்கு முருகேசன் தலைமை வகித்தார்.

கமலஹாசன், சேசு இருதயம் ஆகியோர்கள் முன்னிலை வகித்தனர். சங்க வரவுசெலவு அறிக்கையை உ. பாண்டி சமர்பித்தார். கூட்டத்தில் தொடர்ந்து இந்த ஆண்டுக்கான வணிகர் சங்க புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். தலைவராக முருகேசன் செயலாளராக உ பாண்டி பொருளாளராக சியாமுதீன் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதனை தொடர்ந்து கூட்டத்தில் தங்கச்சிமடம் பகுதியை கடந்து ராமநாதபுரம் ராமேஸ்வரம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் தினந்தோறும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் செல்கின்றனர்.இந்த நிலையில் ராமேஸ்வரம் சாலை குண்டும் குழியுமாக உள்ளதால் சுற்றுலாப்பயணிகள் மிகுந்த சிரமம் அடைவதால் சாலையை பராமரித்து தருவதுடன் சாலை ஓரங்களில் உள்ள கழிவுநீர் கால்வாய்களை அகற்றித் தருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தங்கச்சிமடம் கிராமப் பகுதி முழுவதும் தெருவிளக்கின்றி பொதுமக்கள் மிகுந்த அவதி அடைந்து வருகின்றனர். அதனை சரி செய்து தர மின்வாரியத்தையும் ஊராட்சி நிர்வாகத்தையும் கேட்டுக் கொண்டது. அத்துடன் வணிகர்களின் நலன் சார்ந்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தங்கச்சிமடம் அரசு மருத்துவமனையின் தரம் உயர்த்தவும் போதிய மருத்துவர்கள் நியமிக்கவும் வைக்கப்பட்டது. சியாமுதீன் நன்றியுரை கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

## எத்தனை கூட்டணி சேர்ந்தாலும், எத்தனை கட்சிகள் சேர்ந்தாலும், தி.மு.க. - அ.தி.மு.க. இடையேதான் போட்டி

### மதுரையில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ பேச்சு



மதுரை, டிச 24-

எத்தனை கூட்டணி சேர்ந்தாலும், எத்தனை கட்சிகள் சேர்ந்தாலும், தி.மு.க. - அ.தி.மு.க. இடையே தான் போட்டி என்று மதுரையில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ.தெரிவித்தார்.

மதுரை மாநகர் மாவட்ட அ.திமு.க.. கட்சியின் புதிய வரைவு வாக்காளர் பட்டியல் குறித்த ஆலோசனைக் கூட்டம் தெப்பக்குளம் பகுதியில் உள்ள திருமண மண்டபத்தில் முன்னாள் அமைச்சரும் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ.தலைமையில் நடைபெற்றது.இதில் மாவட்ட,பகுதி,வட்ட,அனைத்து சார்பு அணி நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

இது குறித்து மதுரை மாநகர மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. நிர்வாகிகளிடம் பேசியதாவது-

அ.தி.மு.க.வில் உழைப்பவர்களுக்கு மட்டுமே மரியாதை ஏமாற்றுபவர்களுக்கு கிடையாது.சூப்பர் ஸ்டார் சொல்வது போல் லேட்டா வந்தாலும் லேட்டஸ்டாக வருவார். அதேபோல் தான் எடப்பாடி பழனிச்சாமியும். தி.மு.க.வை அகற்ற வேண்டும் என்றால் ஒத்த கருத்துடன் இருப்பவர்கள் யார் என்றாலும் வரலாம் என எம்.ஜி.ஆர். சொன்னார். போதையை கட்டுப்படுத்த இந்த அரசுக்கு வக்கில்லை. எத்தனை கூட்டணி சேர்ந்தாலும், எத்தனை கட்சிகள் சேர்ந்தாலும், தி.மு.க., அ.தி.மு.க. இடையே தான் போட்டி.முதல்வர் ஸ்டாலினும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினும் மக்களை ஏமாற்றி ஓட்டு வாங்க எந்த எல்லைக்கும் செல்வார்கள்.

நாளைக்கு முதல்வர் ஸ்டாலின் அல்ல உதயநிதி ஸ்டாலின் வந்தாலும் மக்களை ஏமாற்றி ஓட்டு வாங்க வேண்டும் அதுதான் அவர்களுடைய நிலைப்பாடு.கட்சி ஆரம்பித்த சினிமா நடிகர்கள் எல்லோரும் எம்.ஜி.ஆரின் புகழைதான் பாடுகிறார்கள். முதலமைச்சர் ஸ்டாலின் என்றைக்காவது கலைஞர் ஆட்சியை அமைப்பேன் என்று சொல்லியுள்ளாரா? அவரே என் பெரியப்பா எம்.ஜி.ஆர் என்று தான் சொல்கிறார்.அ.தி.மு.க.வில் இருந்து யார் விலகினாலும், எந்த ஒரு இழப்பும் இல்லை. எம்.ஜி.ஆர், ஜெயலலிதா காலங்களில் எத்தனையோ பேர் விலகினாலும் அதை பற்றி கவலைப்படாமல் தொண்டரை நம்பி தான் இருந்தார்கள்.எடப்பாடி பழனிசாமியும் தொண்டர்களை நம்பி தான் உள்ளார். தி.மு.க. நான்கரை ஆண்டுகளாக மதுரைக்கு என்ன செய்தது. எதுவும் செய்யவில்லை. இதை சொல்லியே நாம் ஓட்டு வாங்கிவிடலாம். மதுரை மாநகராட்சி ஊழல் ஒன்று போதாதா மாநகரின் நான்கு தொகுதியை வெற்றி பெற. மூர்த்தி அல்ல மும்மூர்த்தி வந்தாலும் மதுரை மக்கள் கொதித்து போய் இருக்கிறார்கள். விடுபட்டவர்களை வாக்காளராக சேர்க்க வேண்டும் இதை செய்தால் நூற்றுக்கு நூறு சதவீதம் மதுரை நான்கு தொகுதிகளில் யாரை நிறுத்தினாலும் அ.தி.மு.க. வெற்றி பெறும். இவ்வாறு அவர் பேசினார்.



அருப்புக்கோட்டை நகர அ.தி.மு.க. செயலாளர் சோலை சேதுபதி அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதி வாக்காளர் திருத்தப் பட்டியலை அருப்புக்கோட்டை நகரத்தில் உள்ள வார்டு செயலாளர்கள், பூத் செயலாளர்களிடம் வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட அம்மா பேரவை துணை செயலாளர் சவுண்டையா, மாவட்ட இலக்கிய அணி தலைவர் கலுசிவலிங்கம், மாவட்ட பிரதிநிதி தர்மர், எம்.ஜி.ஆர். மன்ற நகர செயலாளர் செல்வேந்திரன், கனகராஜ், பரமசிவம், தங்கராஜ், வடை மாரிமுத்து, ராம் சுந்தர், தங்கம், சக்திவேல் முருகன் மற்றும் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



சாத்தூர் சட்டமன்ற தொகுதியில் அ.தி.மு.க. சார்பாக போட்டியிட அருப்புக்கோட்டையை சேர்ந்த அ.தி.மு.க. கவுன்சிலர் ராம திலகவதி அ.தி.மு.க. தலைமைக் கழகத்தில் முன்னாள் அமைச்சர்கள் கோகுல இந்திரா, கே.டி.ராஜேந்திர பாலாஜி, வைகைச்செல்வன் ஆகியோரிடம் விருப்ப மனு கொடுத்தார்.



சென்னை அ.தி.மு.க.தலைமை அலுவலகத்தில் மதுரை மாநகர் மாவட்ட மத்திய தொகுதியில் போட்டியிட விருப்பம் தெரிவித்து மத்திய 4- ம் பகுதி அ.தி.மு.க. செயலாளர் ரவிராஜ் தலைமை கழக நிர்வாகிகளிடம் தனது மனுவை அளித்தார். அருகில் அப்துல்காதர், திராவிட செல்வன் ஆகியோர் உள்ளனர்.

## கக்கனின் 44 -வது ஆண்டு நினைவு தினம்: அமைச்சர் பி.மூர்த்தி அஞ்சலி செலுத்தினார்

மேலூர், டிச.24-

தியாக சீலர் கக்கனின் 44 ம் ஆண்டு நினைவு தினத்தை யொட்டி தும்பைபட்டியில் உள்ள அவரது மணிமண்டபத்தில் கக்கனின் திருவுருவ சிலைக்கு தமிழ்நாடு அரசு சார்பில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார், மேலூர் வருவாய் கோட்டாட்சியர் சங்கீதா ஆகியோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

நிகழ்ச்சியில் மேலூர் தாசில்தார் செந்தாமரை, கொட்டாம்பட்டி பி.டி.ஓக்கள் சங்கர் கைலாசம், ராஜமார்த்தாண்டன், கொட்டாம்பட்டி ஒன்றிய பொறுப்பாளர்கள் ராஜராஜன் (தெற்கு), பாலசுப்பிரமணியன் (கிழக்கு), கேசம்பட்டி செ.ராஜா (மேற்கு), பழனி (வடக்கு), மேலூர் நகர் மன்ற தலைவர் முகமது யாசின், அ.வல்லாளப்பட்டி பேரூராட்சி சேர்மன் குமரன், மேலூர் ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் செல்வராஜ் (வடக்கு), இளங்கண்ணன் (கிழக்கு), வ.ரெகுபதி (மேற்கு), மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் வேலாயுதம், கொட்டாம்பட்டி, மேலூர் ஒன்றிய பொறுப்பு குழு உறுப்பினர்கள் மணப்பட்டி கண்ணன், அட்டபட்டி ராஜா, கீழையூர் ஜெகன்குமார், பட்டூர் துரை புகழேந்தி, சந்திரன், அ.வல்லாளபட்டி துணைத் தலைவர் கலைவாணன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் அட்டப்பட்டி குமார், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் தும்பைபட்டி பழனியப்பன், கொட்டகுடி அஜிதா சரவணன், கிளை செயலாளர்கள் சரவணன், லெட்சுமணன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர்கள், வருவாய் ஆய்வாளர் இக்பால், கிராம நிர்வாக அலுவலர் சரவணன், ஊராட்சி செயலர் கணேசன், கட்சி நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று முகாம் அலுவலகத்தில், முன்னாள் மத்திய அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான ப.சிதம்பரம் சந்தித்துப் பேசினார்.

# சிறுபான்மையின மக்களுக்கு பாதுகாப்பு அரண் தி.மு.க. அரசு

## கிறிஸ்துமஸ் விழாவில் துணை முதல்வர் உதயநிதி பேச்சு

**சென்னை, டிச. 24-**

சிறுபான்மையின மக்களுக்கு பாதுகாப்பு அரணாக தி.மு.க. அரசு விளங்கி வருகிறது என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சென்னை ஆர்.கே.நகரில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் தெரிவித்துள்ளார்.

சென்னை ஆர்.கே.நகரில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:- இயேசு என்றாலே நமக்கு முதலில் நினைவுக்கு வருவது அவரின் மனிதநேயம், இரக்கம் மற்றும் சமத்துவம். அனைவருக்கும், குறிப்பாக எளியவர்களுக்கு உடனடியாக உதவுவது. இதை ஏன் சொல்கிறேன் என்றால், கிறிஸ்தவக் கொள்கைகளுக்கும் நம் திராவிடக் கொள்கைகளுக்கும் மிகப் பெரிய வித்தியாசம் கிடையாது.

சிறுபான்மையின மக்களுக்கு ஏராளமான திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக சிறுபான்மையின மக்களுக்குப் பாதுகாப்பான ஆட்சியை வழங்கி வருகிறார். சிறுபான்மையின மக்களுக்கு பாதுகாப்பு அரணாக நம்முடைய திராவிட மாடல் அரசு விளங்கி வருகிறது.

தமிழ்நாட்டின் ஒவ்வொரு தொகுதிக்கும் என்ன தேவை, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் என்ன தேவை என்று பார்த்துப் பார்த்துச் செய்து கொண்டிருக்கிறார். இப்படி நம் அரசும், முதல்வர் கொண்டு வரும் திட்டங்களால்தான் இன்று 11.19 சதவிகித பொருளாதார வளர்ச்சியோடு இந்தியாவிலேயே நம்பர் 1 மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது.

நாங்கள் கிறிஸ்துமஸ் அன்று கேக் வெட்டி, இஸ்லாமியர்களுக்குக் கொடுப்போம். ரம்ஜான் அன்று எங்களுடைய வீட்டிற்குப் பிரியாணி வரவில்லை என்றால், உரிமையோடு கேட்போம். பொங்கல் அன்று தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் இணைந்து சமமாகப் பொங்கலைக் கொண்டாடுவோம். இதுதான் தமிழ்நாட்டின் பெருமை.

இன்று சங்கிகள் தமிழ்நாட்டுக்கு பல்வேறு பிரச்சினைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களோடு யார் கூட்டணி வைத்திருக்கிறார்கள் என்பது உங்களுக்கே தெரியும். பழைய அடிமைகளோடு சேர்த்து இன்று புதிய அடிமைகளும் சேர்வார்களா என்று அவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் யாரோடு வேண்டுமானாலும் கூட்டணி வைத்துக் கொள்ளுங்கள், நாங்கள் தமிழ்நாட்டு மக்களோடும்‘ வெற்றிக் கூட்டணி’யோடும் இருக்கிறோம்.

இது வெறும் தேர்தலுக்காக அமைக்கப்பட்ட கூட்டணி கிடையாது. இது ஒரு கொள்கைக் கூட்டணி. அதனால்தான் கடந்த 11 தேர்தல்களாக தமிழ்நாட்டு மக்கள் வெற்றியை மட்டுமே நம்முடைய தலைவருக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்தத் திராவிட மாடல் அரசு தொடர, நீங்கள் பாதுகாப்பாக இருப்பீர்கள் என்கிற நம்பிக்கையோடு, வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் ஒரு மிகப்பெரிய வெற்றியை நீங்கள் நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு" என்று 200 தொகுதிகளை இலக்காகத் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார். 200 மட்டுமல்ல, அதற்கும் அதிகமான தொகுதிகளில் நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வெற்றி பெற்றுக் காட்ட வேண்டும். அதற்குத் தொடக்கமாக இந்த ஆர்.கே. நகர் தொகுதியில் மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றியை நீங்கள் உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வால்டாக்ஸ் சாலை தண்ணீர் தொட்டி தெரு மற்றும் அண்ணா பிள்ளை தெரு பகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்பட்டு வரும் 700 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், பல்நோக்கு மையம், இரத்த சுத்திகரிப்பு மற்றும் மறுவாழ்வு மையம், மாநகராட்சி அச்சகம் மற்றும் மேம்படுத்தப்படவுள்ள விளையாட்டுத் திடல் என ஒருங்கிணைந்த வளாக கட்டுமான பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார்.

# தமிழ்நாட்டில் அரையாண்டு தேர்வு விடுமுறை இன்று முதல் துவக்கம்

**சென்னை, டிச. 24-**

தமிழ்நாட்டில் இன்று முதல் அரையாண்டு தேர்வு விடுமுறை தொடங்குகிறது. மொத்தம் 12 நாட்கள் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறையின் கீழ் பாடத்திட்டங்களை பின்பற்றக்கூடிய அரசு, அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளில் படிக்கும் 1-ம் வகுப்பு முதல் பிளஸ்-2 வகுப்பு வரையிலான மாணவ-மாணவிகளுக்கு கடந்த 10-ம் தேதி அரையாண்டு தேர்வு தொடங்கியது.

1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு மாணவர்களுக்கு தேர்வு முடிந்த நிலையில், பிற வகுப்பு மாணவ-மாணவிகளுக்கு நேற்றுடன் தேர்வு நிறைவு பெற உள்ளது. தேர்வு முடிந்ததும், இன்று முதல் அரையாண்டு தேர்வு விடுமுறை தொடங்குகிறது. பள்ளிக்கல்வியாண்டு நாட்காட்டியில் குறிப்பிடப்பட்டது போல, அரையாண்டு தேர்வுக்கு 12 நாட்கள் அதாவது இன்று முதல் அடுத்த மாதம் (ஜனவரி) 4-ம் தேதி வரையில் விடுமுறை வழங்கப்பட உள்ளது. விடுமுறை முடிந்து அடுத்த மாதம் 5-ம் தேதி (திங்கட்கிழமை) மீண்டும் பள்ளிகள் திறக்கப்பட இருக்கிறது.




மருத்துவம் மற்றும் மக்கள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று சென்னை, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக வளாகத்தில், ரூ.12 கோடி செலவில் புதிய நுழைவு வாயில், புனரமைக்கப்பட்ட கட்டிடங்கள் மற்றும் வளாகத்தினை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழக துணை வேந்தர் நாராயணசாமி மற்றும் துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# இ.பி.எஸ். உடன் பேசியது என்ன? நயினார் நாகேந்திரன் விளக்கம்

**கோவை, டிச. 24-**

அ.தி.மு.க.வுடனான பேச்சுவார்த்தையில் ஓ.பன்னீர் செல்வம், தினகரன் குறித்து பேசவில்லை என்றும் தொகுதி பங்கீடு

குறித்து பேசவில்லை என்றும் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழக பா.ஜனதா தேர்தல் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் நேற்று சென்னை வந்தார். அவர் தியாகராயகரில் உள்ள பா.ஜனதா அலுவலகத்தில் பா.ஜ.க. நிர்வாகிகளுடன் சட்டமன்ற தேர்தல் பணி, கள நிலவரம், வெற்றி வாய்ப்பு உள்ளிட்டவை குறித்து ஆலோசனை நடத்தினார். பின்னர் எடப்பாடி பழனிசாமியுடன் தொகுதி பங்கீடு தொடர்பாக சுமார் ஒன்றரை மணிநேரமாக பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்த நிலையில், கோவையில் பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் கோவையில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது;- பேச்சுவார்த்தையில் சட்டமன்ற தேர்தல், பாராளுமன்ற தேர்தலில் ஓட்டு எவ்வளவு வாங்கியுள்ளோம், வாக்கு சதவீதம் எவ்வளவு? என்பது குறித்து பேசினோம். தொகுதி பங்கீடு குறித்து எடப்பாடி பழனிசாமியுடன் பேசவில்லை. அ.தி.மு.க.வுடனான பேச்சுவார்த்தையில் ஓ.பன்னீர்செல்வம், தினகரன் குறித்து பேசவில்லை. பேச்சுவார்த்தையின்போது விஜய் குறித்து எதுவும் பேசவில்லை. தேர்தலுக்கு இன்னும் 3 மாதங்கள் உள்ளன. யார் யார் பக்கம் இருக்கிறார்கள் என்பது பின்னர் தெரியவரும்.

பியூஷ் கோயலுடன் அரசியல் நிலவரம் குறித்து பேசினோம். அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை. எதிரியும் இல்லை. திமுக அகற்றப்பட வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். ஒத்த கருத்துடையோர் எங்கள் கூட்டணிக்கு வர வேண்டும். தை பிறந்தால் வழி பிறக்கும். ஒட்டுமொத்தமாக தமிழகத்தில் விடியக்கூடிய அரசு வரும். இவ்வாறு அவர் கூறினார்.

# வரும் சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க., பா.ஜ. கூட்டணி மிகப்பெரிய வெற்றி பெறும்

## எடப்பாடி பழனிசாமி பேட்டி

**சென்னை, டிச. 24-**

சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி மிகப்பெரிய வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் என்று தமிழக தேர்தல் பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளர் ப்யூஸ் கோயலுடனான சந்திப்புக்கு பிறகு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனசாமி தெரிவித்தார்.

தமிழக பா.ஜனதா தேர்தல் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் நேற்று சென்னை வந்தார். அவர் தியாகராயகரில் உள்ள பா.ஜனதா அலுவலகத்தில் பா.ஜ.க. நிர்வாகிகளுடன் சட்டமன்ற தேர்தல் பணி, கள நிலவரம், வெற்றி வாய்ப்பு உள்ளிட்டவை குறித்து ஆலோசனை நடத்தினார். அதனை தொடர்ந்து அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தமிழக பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயலை சென்னை லீலா பேலசில் தொகுதி பங்கீடு தொடர்பாக சுமார் ஒன்றரை மணிநேரமாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

மத்திய அமைச்சர் பியூஷ் கோயலுடனான சந்திப்புக்கு பிறகு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி நிருபர்களிடம் கூறியதாவது:- ''நீண்ட இடைவெளிக்கு பிறகு மத்திய அமைச்சர் பியூஷ்கோயலை சந்தித்து பேசினோம். இந்த சந்திப்பின் போது, தமிழக அரசியல் நிலவரம் குறித்து அவர் கேட்டறிந்தார். 2026 சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. - பா.ஜ.க. மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள கட்சிகள் ஒருங்கிணைந்து எப்படி செயல்படுவது என்பது குறித்து ஆலோசித்தோம். மக்கள் விரோத தி.மு.க. ஆட்சியை அகற்ற ஆரம்ப கட்ட பேச்சு வார்த்தை நடத்தியுள்ளோம். தி.மு.க. ஆட்சியை அகற்ற தமிழக மக்கள் கொந்தளிப்புடன் உள்ளனர். சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி மிகப்பெரிய வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.



தேசிய விவசாயிகள் தினத்தை முன்னிட்டு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வத்தை, சென்னையில் விவசாய சங்கப்பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் சந்தித்து வாழ்த்து பெற்றனர். உடன் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் செயலாளர் தட்சிணாமூர்த்தி, வேளாண்மை இயக்குநர் முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் குமரவேல்பாண்டியன், ஆகியோர் உள்ளனர்.



தஞ்சாவூர் மாவட்டம் வல்லம் பேரூராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் ஆகியோர் அய்யனார் கோவில் பகுதி-II திட்டப்பகுதியில் ரூபாய் 197.45 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 969 புதிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டடங்களை நேற்று திறந்து வைத்து வீட்டிற்கான ஒதுக்கீடு ஆணையினை வழங்கினர்.



தலைமைச் செயலகத்தில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நடப்பு சம்பா பருவத்தில் நெல் கொள்முதலுக்கு தேவையான முன்னேற்பாடு நடவடிக்கைகள், பொது விநியோகம் மற்றும் துறையின் செயல்பாடுகள் குறித்து உணவுப்பொருள் வழங்கல் துறை அலுவலர்களுடன் கலந்தாய்வுக்கூட்டம் நடைபெற்றது.